ஞாயிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 30.

## தமிழர் வீரஎழுச்சி

(புதுவை—சிவம்.)

1. முந்தையோரின் வீரமொழி முன்னறிவோமே
அந்தவிதம் நாம்அமைய
அமைதி கொள்வானேன்?

2. தமிழருக்குக் குருதிமிக்க செக்கிறமாமே
தனியுரிமைப் புரட்சியில்
நாம் தயங்குதல் நன்றே?

3. தமிழரிடைத் தங்கிவாழும் தன்னலப்பேயை
தமிழ்க் கடலில் அமிழ்த்தொழித்து
தலைமை தாங்குவோம்!

4. தமிழரென்றால் வீரரென்று தனிப்பொருள்கொள்வோம்
தனிப்பொருளைத் தனிச்செயலில்.
தழைத்துறச்செய்வோம்!

5. வீரமென்று தீரமொழி பேசுதல் வீணே
ஆர்வத் தமிழ் அரசியலை
அமைத்திடுவோமே!

# தீச்சுழலில்.

பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன, அரசன் அகமம்னன் ட்ராய்நகரின்மீது படையெடுத்து. அரண்மனையில்அடைந்து கிடக்கும் அரசிக்கும், மன்னனின்மையால் மகிழ்ச்சியிழந்து நிற்கும் நகரமக்களுக்கும், மலைக்கு மலை ஏற்றப்படும் தீச்சுடர்களின் மூலமாகத் தன் வெற்றியை அறிவிக்க அரசன் ஏற்பாடு செய்திருந்தான். அதன்படி மாளிகையின் உயர்ந்த மாடத்தில் நிறுத்தப்பட்ட காவல்காரனின் கண்கள், வடகோடி மலையுச்சியைக் கண்டுகண்டு பூத்துவிட்டன. கம்பத்தில் கட்டப்பட்ட கதநாய்போல் காவலாளி ஓராண்டாக ஓயாதுழைத்தான். வரண்ட வானத்தைப்பார்த்துப் பார்த்து வானநூலும் அவன் வசத்தில் வந்துவிட்டது. கண்ணிமைகள் கனவுலகிற்கு இழுக்கும்; கருத்துக் கடைமைக்காகப் போராடும். இடையிடையே புன்னகையும் பெருமூச்சும் அவன் முகத்தைக் கலக்கின. தான் நிற்கும் மாளிகையின் வரலாற்றை அவன் நன்கு அறிவான். அதன் விழுமையும், செழுமையும் விள்ளுந்தரமன்று. அது பத்தாண்டுகளில் படும் அவதியையும் அவன் உணர்வான். அரசியோ அரசனை மறந்துவிட்டாள்காதகனொருவனைக்கைப் பற்றி காமரசத்தைக் காதல்தேனெனப் பருகினாள், இனக்கொலையை இசை விருந்தென ஏற்றாள். மன்னனின் மாட்சியும், மாற்றானுடன் மஞ்சத்தில் உறங்கும் மங்கையின் மருட்சியும் காவலாளியின் கண்களில் நீரைப்பெருக்கின. "தீச்சுழல் தோன்றட்டும், தீயவை ஒழியும், காவலன் வருவான், காமுகன்வீழ்வான்'' என எண்ணியவண்ணம் வடக்குத் திக்கை எறிட்டுப்பார்த்தான். இருள்கவிந்த மலைமுடிசிவந்தது, தீச்சுடர் நாவிட்டு எழுந்தது. அருகிலுள்ள மலைமுடிகளும் கனல்மூட்டின. "வேந்தன்வெற்றிகொண்டான். வெல்க அவன் திறம்! வீழ்க வீணனின் வாழ்வு'' எனக் காவலாளி உலர்ந்த உதடுகளால் உரக்கக்கூவினான். இறந்தகால இருளிலிருந்து எழும்பித் துள்ளும் எதிர்காலத்தைக் கண்டான் காவலாளி, வெற்றியின் அறிகுறியான தீச்சுழலில்.

இக்கட்டம், நாடகவுலகில் பெருமலைகளென எழுந்துலவும் முப்பெரும் கிரேக்க நாடகாசிரியர்களுள்ளும காலத்தாலும் திறமையாலும் முதலிடம்பெறுகிற ஈஸ்கிலஸ் தீட்டிய "அகமெம்னன்'' என்ற கூத்தின்ஒருகூறு. அயல்நாட்டில்அலைந்து திரிந்த அகமெம்னனை ஒப்பிடுங்கள் அறிவெனும் அரசனுக்கு. அவன் வயப்பட்டு உரிமையுடன் வாழவேண்டிய மங்கைதான், மடைமையணி பூண்ட மதத்தலைவனை மணாளனாகக்கொண்டு வாழும் நம் நாடு. மடைமையைச்சாடி, மதப்பித்தர்களை வென்று, புராண இதிகாசங்களைப் பொசுக்க, சுயமரியாதைக்காரர்கள் ஏற்றும் தீச்சுழலுக்கு ஒப்பிடுங்கள், வேந்தனின் வெற்றியை. மலையின்மேல் எழுப்பப்பட்ட தீ எவ்வாறு இருள் கவிந்த அடிவானத்தை விளக்கமுறச் செய்ததோ, அவ்வாறே சுயமரியாதைக் காரர்களின் தீச்சுடர் "தமிழ்க்குன்றில் தமிழ்நாடெங்கும் இருளாம்'' எனப் புரட்சிக்கவியால் கூறப்படுகிற அறியாமை இருளை அகற்றி அறிவு விளக்கத்தைஉண்டாக்கும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்தில் வீழ்ந்துகிடந்த நாட்டைத் தட்டியெழுப்ப நாங்கள் கைக்கொண்டுள்ள வெறுப்பின் அறிகுறியைப் பார்த்துக் காலமெனும் காவலாளி களிப்பெய்துவான். வேந்தனின் வெற்றியும், வீணனின் வீழ்ச்சியும் தீச்சுழலில்வெளிப்பட்டதுபோல, நாங்களும் பல வெற்றிகளையும், வீழ்ச்சிகளையும்எதிர்பார்க்கிறோம் தீச்சுழலில்.

செழியன்.

"மனுநீதிக்கு எழுந்தமறுப்பு, பெரிய புராணத்தைப்பற்றியதல்லாமல், கம்ப இராமாயணத்தையும் கசக்குகிறதே'' எனக்கலங்கிய உள்ளத்துடன், கசங்கிய கண்களுடன் வெளிக்கிளம்பிய திருநீறுபூசிகள், பெருநாமதாரிகள், மொட்டைத்தலையர், கொட்டைகட்டிகள்,காவியணிந்தோர், கமண்டலமேற்றோர் எல்லோரும் சுயமரியாதைக்காரர்களைச் சுட்டெரிப்பார்போல, ஆற்றியபெருந்தூற்றலில் மமதையும், மடைமையும் மண்டுபுகைந்ததன்றி, அறிவாகிய ஒளி பிரகாசிக்கவில்லை. பஞ்சாலை பரமதயாளுவிலிருந்து பண்டிதமணி கதிரேசர்வரை, இலைவள்ளல் இட்லிசுப்பையரிலிருந்து இந்துமித்ரன் ஆசிரியர்வரை, சர்க்காருக்குச் சகஸ்கரநாமம்செய்து, கவர்னருக்குக் காவடிதூக்கினரேயன்றி, விடுத்த வினாக்களுக்கு விடைகள் இறுக்கப்படவில்லை. வெம்பிய உள்ளங்களிலிருந்து வெஞ்சொற்கள் வெளிப்பட்டதன்றி, விளக்கவுரைகள் வழங்கப்படவில்லை. "தீ மூட்டுபவர்களை நாடு தீயில்தள்ளும்'' என்றார் ஒருவர். செவிச்சுவை உணரா மாக்கள்''எனச் செப்பிய சிவநேசச் செல்வரைச் சிந்தையில்பதித்து, சுயமரியாதைக்காரர்களைக் "காடிகள்'' என்று கழறியது, கண்ணும், கருத்தும்கெட்ட கபோதிக்கூட்டமொன்று. "மிருகத்தனமான செயல்'' எனச் சீறினாராம் தன்னைக் கேலிச்சித்திரங்களுக்குப் பயன்படுத்திய ஏடுகளிடம் தஞ்சம்புகுந்த, போதை தலைக்கேறிய மேதை ஒருவர். சுடுசொற்கள்பலகூசாது வீசப்பட்டன. கருத்தில் காணப்படும் பலமின்மை கூக்குரலால் சமன்செய்ய முயற்சிக்கப்பட்டது. முடிவு என்ன? கம்பர் விழாவில் கலாம்விளைந்ததன்றி, இலைபோடும் இடங்கள் கலைவழங்குங் கூடங்களாக மாறினதன்றி, கலியுகக் கம்பர்கள் கம்பஇராமாயணத்திற்குக் "கலிதீர்க்கும்கடைகள்'' திறந்ததன்றி, "மற்போர்ப்பருவங்கடந்துள்ளேன், சொற்போருக்குத் தயார்'' என்ற ஒலிக்கு எதிரொலியாக, வாதுக்கழைத்த மாணவர்களிடமிருந்து மீளும்வகையறியாது கதிரேசர்கள் மதிலேசர்களானதன்றி, கெம்பீரக்குரல் மீனாட்சிசுந்தரர்கள் தழதழத்த நாவரட்சியாளர்களாகித் திகைத்ததன்றி, காலவெள்ளத்தை அடைக்கமுன்வந்த சேதுபந்தனங்கள் சாதுபந்தனங்களாக, உள்ளொளியடங்கி ஒதுங்கியதன்றிப்பட்டுக் கோட்டை அடிபெடுத்துக்கொடுக்கப் பல பதிகளிலும் பதிகங்கள்பெற்று, குகபக்தர்கள் குள்ளநரிகளானதன்றி, ஐயத்திற்கு விளக்கமும், வினாவிற்கு விடையும் கொடுக்கப்பட்டதா? காணாதவிடத்துக் கடவுள்களின் திருவிளையாடல்களைப்பற்றி மிகைபடப்பேசிக், கண்ணீர் மல்கிப் பக்தியில் ஆழ்ந்துவிடும் சொல்லின் செல்வர்கள், சுயமரியாதைக்காரர்களைக்கண்டவிடத்துச், சுருதிகுறைந்து, சுரம்இறங்கி, தாளந்தப்பி,நயந்தொலைந்து நாதந்திரிந்து, உள்ளம் நடுங்கி, உள்ளதை மறந்து திகைப்பானேன்? செல்லும் சொல் செல்லாததாவதேன்? கூட்டத்திலிருப்பவர்களெல்லாம் 'இரக்கமிலா அரக்கர்களா'? "விடை'' என்றவுடன் "வெளியேபோ'' என்றபதில். மதிற்சுவர்களினிடையே,மக்கள்கூட்டத்திற்கு முன்பாகச் சாம்பிராணிப்புகை சூழ, ஜாலரா பின்னே ஒலிக்கச், சுண்டெலிநாயகனைத் துதித்துச், சுப்பிரமணியனை வாழ்த்தி, சக்தி நாமாவளியுடன் சிவபுராணத்தை இன்னியங்களுடன் தொடங்கும் பிரசங்கவாரிகள், கேள்வித்தாளை நீட்டியவுடன் வேள்விமுதல்வன் வேதியனுருக்கொள்ளும் கட்டத்துடன் கதையை நிறுத்திவிடுவார்கள். குதுகலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டம் குழப்பத்தில் முடியும். தலைதப்பியது தம்பிரான்புண்ணியமெனத் தாணக்காரர்களின் உதவியால் வெளியேறி. மறுநாள்கூட்டத்திற்குக்கூட இல்லாமல் மாயமாய் மறைந்துவிடுவார் தொண்டர் சீர்பரப்பும் வெண்கலத் தொண்டையார். தோடுடைய செவியனைப்பற்றி வீடுவீடாய் பாடிச்செல்லும் பக்ககோடிகளும், மார்கழித்திங்களை மாசிமகத்தில் பாடிமகிழும் மதோன்மத்தர்களும், கண்கூசிக் கருத்துக்கருகி, உள்ளம்உருகி, உடல்வெதும்பக் காரணமாயிருந்தது சுயமரியாதைக்காரன் ஏற்றிய தீச்சுடர், மதத்தின் தலைவர்கள்,மடைமை விருந்தினர், குட்டித்தம்பிரான்கள், குவலயப் பிரபுக்கள் காண்கிறார்கள் தங்கள் அழிவுக்காலத்தைத் தீச்சுழலில்.

தீ நாவிட்டு எரியும் என்று நவில்வார்களே, அது வாய்விட்டுக் கூறுமானல், இலை மறை கனியாய்க் கிடக்கும் பல உண்மைகள் வெளிப்படும். தீச்சுழலில் உண்டாகிய ஒளிப்பிழம்புகள், தீயின் வடிவு ஞாயிறு, வெப்பத்தால் வாழும்

(11ம் பக்கம் பார்க்க)

# கட்சியில், கடவுள்-மதம்.

நக்கீரன்.

'பல நூற்றாண்டுகளாகவே நம் நாட்டு மக்கள் கடவுள் மதம் என்பதையே தங்கள் வாழ்க்கையின் எல்லாத்துறைகளுக்கும் அடிப்படையாக வைத்து எல்லாக் காரியங்களையும் நடத்துவதில் பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள். ஆகையால் மக்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்ய விரும்புவோர், கடவுள்—மதம் ஆகியவற்றைப்பற்றிய கண்டனங்களோ எதிர்ப்புக்களோ செய்யக்கூடாது, அங்ஙனம் செய்பவர்கள் கட்சியில் இருக்கக்கூடாதென்பது நமது கட்சியிலுள்ள சிலரின் கருத்தாக இருப்பதை அறிகிறோம். ஆனால், இவர்களின் இக்கூற்று எந்த அளவில் உண்மை என்பதையே ஈண்டு நாம் ஆராய்ந்துபார்க்க வேண்டியிருக்கிறது.

உண்மையாகவே கடவுளிடத்திலும், மதத்தினிடத்தும் இவர்களுக்கு நம்பிக்கையும் பற்றுதலும் இருக்குமானால், முதலில், அப்பொருள்களைப்பற்றிய உண்மைக் கருத்துக்களையும், அவை எவ்வகையில் மக்களின் வாழ்க்கைக்கு உதவி செய்தன—செய்கின்றன வென்பதையும் அறிவோடு ஆராய்ந்து பார்க்கவேண்டாமா? மக்களின் வாழ்க்கைத்துறையிலுள்ள எந்தக்காரியம், எந்த முறையில் எந்தக் காலத்தில் இச்சொல்லப்பட்ட கடவுள்-மதம் ஆகியவற்றின் உதவியைக்கொண்டு நடைபெற்றது என்பதை ஆதாரத்தோடு விளக்க வேண்டாமா? கடவுள்—மதம் ஆகியவற்றுக்கும், மக்களின் வாழ்க்கைத் துறைக்கும் ஏற்படுகின்ற சம்பந்தம் எவ்வாறு—எந்த முறையில் நிகழ்கின்றன வென்பதையாவது எடுத்துக்காட்ட வேண்டாமா?

கடவுளின் கடாட்சமும், மதத்தின் மகிமையும், மங்கிப்போன ஏடுகளில் உள்ள எழுத்துகளில் காணப்படுகின்றனவே யொழிய, நடைமுறையில் யாதாயினும் ஒரு நன்மை கடவுள்—மதம் ஆகியவற்றால் மக்களின் வாழ்க்கைக்கு ஏற்படுகின்றதா என்பதையாவது இவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா?

கடவுட் கொள்கையும், மதக்கோட்பாடும், உயிர்களைத் தண்டிப்பதும் அநுக்கிரகிப்பதும் என்ற ஒரே ஒருமுடிவையே கூறுகின்றன வென்பதையாவது; தண்டிப்பதும் அநுக்கிரகிப்பதும் ஒரு கடவுளின் செயலாக இருக்குமானால், அதற்குக் கடவுளிலக்கணம் கூறுகின்றபடி கடவுள் என்ற பெயர் பொருந்துமா என்பதையாவது யோசித்துப் பார்க்க வேண்டாமா?

கடவுள் தன்மையைப்பற்றி எழுதி வைக்கப்பட்டுள்ள இலக்கணங்கள் அனைத்தையும் ஒருங்கு சேர்த்துப்பார்த்தால், கடவுள் என்ற ஒரு பொருள் எந்த விதத்திலும் இருக்க முடியாதென்ற முடிவுக்கே வந்து தீருவோம் என்பதையாவது கடவுள்—மதம் ஆகியவற்றுக்காகப் பரிந்து பேசுவோர் எண்ணிப்பார்க்க வேண்டாமா? ஏனென்றால், கடவுள் நல்லவர், எல்லோருக்கும் நன்மையையே செய்பவர், மறந்தும் தீமையை நினையாதவர், நல்லார்க்கும் பொல்லார்க்கும், கற்றார்க்கும் கல்லார்க்கும் காணார்க்கும் கண்டார்க்கும் எல்லார்க்கும் நலமேசெய்பவர். இப்படிப்பட்ட ஒரு நல்ல கடவுள் நல்லவர்களைக் காக்கவும், பொல்லாதவர்களை அழிக்கவும் அவதாரங்கள் எடுப்பானேன்? கடலில் போய்ச் சேரும் நீர் எல்லாம் உப்புத்தன்மையை அடைவது போலக், கடவுளிடத்தில் போய்ச்சேரும் உயிர்கள் எல்லாம் கடவுள் தன்மையையே அடைகின்றன என்றால், கடவுள் தனி ஒரு அவதாரம் எடுத்துக் கெட்டவர்களை அழிக்கும் வேலையில் ஈடுபடுவானேன்? உயிர்கள் அனைத்தும் கெட்டவழிகளில் செல்லாமல் இருப்பதற்காகவே, கெடுதல் செய்பவர்களைக் கடவுள், தான் தண்டிப்பதன் வாயிலாக, உயிர்களை நல்வழியிற் செல்லும்படி செய்கிறார் என்றால், ஒரு நல்ல கடவுள்—அன்பே வடிவான கடவுள், கெட்டகாரியம் செய்யும் உயிர்களை எப்படி உண்டாக்கினார்? நல்லதையே விரும்புங்கடவுள் கெட்டகாரியங்களைச் செய்யும் உயிர்களை உண்டாக்குவாரா? உலகத்தையும் அதிற்காணப்படும் உயிர்களையும் படைத்த கடவுள், அப்படைப்பிற்குமுன் எங்கே இருந்தார்? எப்படியிருந்தார்? என்ன செய்து கொண்டிருந்தார்? நோயையம் அது தீர்வதற்குரிய மருந்தையும் உண்டாக்கியதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், உயிர்களுக்கு நோயை ஏன் உண்டாக்க வேண்டும்? பின்னர் அது தீர்வதற்கு மருந்துகளை ஏன் உண்டாக்க வேண்டும்? நோயையும் மருந்துகளையும் உண்டாக்கிய கடவுள் இதோடு நின்றுவிடுகிறாரா? இல்லையே! நோய் தீர்வதற்குத் தன்னையே வணங்கி வழிபட்டுக்காணிக்கை செலுத்தவேண்டுமென்றல்லவா கூறுகின்றது. இத்தகைய ஒரு கடவுள் எங்காவது இருக்க முடியுமா? இருக்கத்தான் விடலாமா?

கடவுளால் உண்டாக்கப்பட்டஒருவன், தன்னை உண்டாக்கியவன் இன்னான் என்பதை அறிய முடியவில்லை என்றால், அது அவனுடைய குற்றமா? அந்தக் கடவுளுடைய குற்றமா? தன்னை அறியமுடியாத அறிவைக் கொடுத்து ஒருவனை அந்தக் கடவுள் படைப்பதும், பின்னர் அவன் கடவுளை அறிந்து வழிபடவில்லை என்ற குற்றத்தை அவன் மேற்சுமத்தி அவனைத் தண்டிப்பதும் அந்தக் கடவுளின் அறிவற்ற செயலாகாதா? உயிர்களுக்கு அறிவைக்கொடுப்பது கடவுள் என்றால், அறிவில்லாமற் செய்வதும் அந்தக்கடவுள்தானே? அங்ஙனமாயின், ஒருவன் தன் அறியாமையாற்செய்யுங்குற்றம் அந்தக் கடவுளைத்தானே சாரும்! உலகில், ஒருவன் செய்யுங்குற்றத்திற்குத் தகுந்த தண்டனை உலகிலேயே கிடைக்கும்போது, அதற்கென வேறு ஒரு உலகம் "நரகம்" என்ற பெயரோடு இருப்பானேன்? கடவுள் செயலால் செய்யப்படும் ஒரு குற்றத்தை உலகிலுள்ள ஒருவன் தண்டித்தால் அது கடவுள் ஆணையை மீறியதாகாதா? இன்ப துன்பங்கள் ஆகிய இரண்டினையும் நுகர்வதற்குரிய இடம் இவ்வுலகமே என்றால் இன்ப-துன்ப நுகர்ச்சிக்கான மேல்-கீழ் உலகங்கள் வேறு இருப்பதாகச் சொல்லுவதில் பொருள் உண்டா? சிற்றின்பமும் சிறுதுன்பமும் நுகர்வது இவ்வுலகத்திலும், பேரின்பமும் பெருந்துன்பமும் நுகர்வது அவ்வுலகங்களிலுமானால், சிற்றின்பங்களையும் சிறு துன்பங்களையும் நுகர்வதற்கு இருவேறு தனித்தனி உலகங்கள் இங்கும் இருத்தல் மேண்டுமன்றோ? இன்பம் நுகர்வோரும் துன்பம் நுகர்வோரும் இவ்வுலகத்தில் ஒருங்கிருக்கும்போது, பேரின்பப் பெருந்துன்பங்களை நுகர்வதற்கு ஒரு உலகம் இருந்தால் போதாதா? அன்றியும், சிற்றின்பத்திற்கு இவ்வுலகமும் பேரின்பத்திற்கு அவ்வுலகமுமானால், பேரின்பப் பெருவெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த "சுந்தரர்" (அறுபத்துமூவரில் ஒருவர்) சிற்றின்பம் ஒன்றுமட்டும் நுகர்வதற்கிடமாகிய இவ்வுலகச் சேற்றுக்கு ஏன் தள்ளப்பட்டார்? பேரின்பப்பெருவுலகில் இருந்த சுந்தரருக்குச் சிற்றின்ப நினைவு ஏன்-எப்படி-யாரால் உண்டாயிற்று? பேரின்பம் அழிவில்லாததும், சிற்றின்பம் அழிவுடையதென்றும் மதநூல்களில் சொல்லப்படும்போது, என்றைக்கும் அழிவில்லாத பேரின்பப் பெருவெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் ஒருவன், அவ்வுலகை விட்டு, எந்தவிநாடியிலும் அழிந்துபோகக்கூடிய சிற்றின்பத்தை நுகரும் உலகிற்கு அனுப்பப்படுவானானால், பேரின்பம் அழிவற்றதும், சிற்றின்பம் அழிவுடையதென்றும் கூறுவதன்பொருள் என்ன? இன்பதுன்பங்களில் பெரிது சிறிதென்ற வேறுபாடு இருக்கமுடியுமா? ஒருவனால்

(4-ம் பக்கம் பார்க்க)

## நட்சியில்,

3-ம் பக்கத்தொடர்ச்சி

ஒருகாலத்தில் நுகரப்படும்இன்பதுன்பங்கள், ஒன்றொருவனுக்கு இன்னொரு காலத்தில் பெரிது சிறிதாகக்காணப்பட்ட போதிலும், அவற்றை நுகர்பவனுக்கு அவை இன்ப துன்பங்களாகவே தோன்றுமன்றோ! இன்பத்தை இன்பமாகவும், துன்பத்தைத் துன்பமாகவும் கருதமுடியுமேயன்றி, அவற்றுள் பெரிது சிறிதென்ற வேறுபாட்டை எவ்வாறு காணமுடியும்? பாலுக்குச்சர்க்கரையும், பழங்கஞ்சிக்கு உப்பும் இல்லையென்று கவலைப்படும் இருசாராருக்கும் ஏற்படுந் துன்பம், அவ்விருவர் நிலைக்கும் ஏற்ப ஒன்றாகவே இருக்கும். ஆகையால், சிற்றின்ப பேரின்பங்களும், அவற்றை நுகர்வதற்குரிய வெவ்வேறு தனிஉலகங்களும் அவைக்குத்தலைவனாகக் கருதப்படும் ஒரு கடவுளும் இருப்பதாகக் கூறுவது வெறும் போலியுரையாகாதா?

இனி, நல்லதுசெய்பவனுக்கு இன்ப உலகமும், கெட்டது செய்பவனுக்குத் துன்ப உலகமும் ஒரு கடவுளால் கொடுக்கமுடியுமா? அப்படிக்கொடுப்பதுதான் கடவுள் இயல்பென்றால், அத்தகைய கடவுள் நல்லவரா? கெட்டவரா? எல்லாரும் நல்லதையே செய்யவேண்டுமென்று விரும்பும் ஒருகடவுள், கெட்டவர்களையும் அவர்கள் எதிரே கெட்ட செயல்களையும் அவற்றிற்குரிய கருவிகளையும் ஏன் படைத்தார்? கள் குடிப்பதுகெடுதல் என்றால், அந்தக் கள்ளைப்படைத்த கடவுளை அறிவான கடவுளெனக் கருதமுடியுமா? கன்னக்கோலைப் படைத்த கடவுளை ஒரு முழுத்திருடன் என்றுகூறுவது குற்றமாகுமா? கடவுள் நல்லவரென்றால், அவர்கையில் சூலம், வேல், வாள், சக்கரங்களும் பிறபோர்க் கருவிகளும் இருப்பானேன்?

இனிக், கடவுள் என்பதாக ஒன்று உண்டென்றால், அப்பொருளை அறியமுடியாமல்இருப்பது யாருடைய குற்றம்? நம்மைப் படைத்தகடவுள், தன்னை இன்னரென நமக்கு அறிவிக்கவில்லை என்றாலோ, அல்லது அறிவித்தும் நாம்உணரவில்லை என்றாலோ, அது கடவுளின் குற்றமேயாகும்என்பதனை எவரே மறுக்கமுடியும்? பிள்ளை தன் தந்தையை அறியமுடியாமல்இருப்பது பிள்ளையின் குற்றமா? தந்தையின் குற்றமா? அப்படியன்று; "கடவுள் மற்றைஉயிர்களைப் போலும் எளிதில் அறியக்கூடிய பொருளன்று; அறிவித்தாலன்றி அறியமுடியாது" என்பதாயின், அதனை அறிவிப்பார் யார்? கடவுளா? மற்றொருவரா? கடவுளாயின், அத்தகைய ஒரு பொருளையும், அதுதான் தன்னை எமக்கு அறிவிக்கின்றதென்பதையும் ஏட்டிலன்றிச் செயலில் இதுவரை எவரும் கண்டதில்லை. அறிவிப்பது பிறரொருவராயின், அவர் நம்போலும் மக்களினத்தைச்சேர்ந்த ஒருவராகத்தானே இருக்கவேண்டும்! நம்போன்ற ஒருவர் கடவுளை நமக்கு அறிவிப்பர் அல்லது காட்டுவர் என்றால், அவரின் வேறுபடாத நாம் ஏன் அந்தக் கடவுளை அறியவோ காணவோமுடிவதில்லை? மக்களுள்ளும் ஒரு சாராருக்குக் கடவுளை அறியும் இயல்பும், ஒரு சாராருக்கு அறியமுடியாத இயல்பும் இருக்கச்செய்வதுதான் கடவுள் இலக்கணமா? அங்ஙனமாயின், உயிர்கள் அனைத்திலும் ஒரே தன்மையாய் விளங்குகிறார் கடவுள்என்று கூறும் மதநூல்களின் பொருள்தான் என்ன? எல்லா உயிர்களிடத்தும் ஒரே தன்மையாய்க் காய்தல் உவத்தலின்றி விளங்கும் கடவுள், தம்மை ஒருவருக்கு அறிவிப்பதும்,ஏனையோருக்கு மறைவாக இருப்பதும் அந்தக் கடவுளுடைய குற்றமாகாதா? கடவுளைக்கண்டவர்களாகச் சொல்லப்படும் சமயாசிரியர்கள் எல்லாரும் மக்களினத்தைச்சேர்ந்தவர்கள்தானே! அவர்கள் கண்களுக்குப் புலப்பட்ட கடவுள், அவர்கள்போலும் மக்களாகிய ஏனையோருக்குப் புலப்படாமல் இருப்பானேன்? கடவுளை நேரில்காணமுடியாத அல்லது காணத்தகுதியற்ற மக்களை அந்தக்கடவுள் ஏன் படைத்தார்? படைத்த பின்னர், கடவுளைக்காணவோ அறியவோ முடியாத கொடியவர்கள் என்று சிலரைத்தண்டிப்பானேன்?கடவுளைக் கண்டு—அவரைவழிபட்டுப்—பேரின்பப்பெருவாழ்வுஅடைவதற்கேஇம்மக்கட்பிறப்புக் கடவுளாலேயே அருளப்பட்டதென்று சொல்லியபின், கடவுளைக்காணமுடியாத நிலைமையை உண்டாக்கும் ஒரு கடவுளைப்போன்ற அறிவுக்குப் புறம்பான ஒன்று உலகில் வேறுயாதாயினும் இருக்கமுடியுமா?

இனி, நம்மில் ஒருவனாக இருந்து, கடவுளைக் கண்டவனாவது, அந்தக் கடவுளை நமக்கும் காட்டுகின்றானா? என்று பார்த்தால், அதுவும் இல்லையே! "கடவுளைக் காணும் பக்குவத்தை நீ இன்னும் அடையவில்லை" என்றுமிக எளிதானவிடையே தரப்படுகின்றது! கடவுளைக்காணும் பக்குவத்தை உண்டாக்குவது யார்? நாம்தான் என்றால், கடவுளை உணர்த்தும் ஒரு தலைவன் நமக்கேன்? அவன்என்றால் கடவுளைக் காணும் முயற்சியை நாம் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? அவனன்றி ஓர் அணுவும் அசையாதபோது நாம் ஏன் அசைதல் வேண்டும்? அசைவதற்கே இடமில்லாது எங்கும் நிறைந்துள்ள ஒரு கடவுள், தான் அசைவதும் எம்மை அசைவிப்பதும் முடியக்கூடியக் காரியங்களா? கடவுள் இல்லாத இடமே இல்லை என்று முடிவுகட்டியபின், அவரைக் "காண்" "அறி" என்றுகூறுவது அறிவுடைமையாகுமா? ஒரு இடத்தில் இல்லாததும் இன்னொரு இடத்தில்இருப்பதுமாகிய ஒரு பொருளையன்றோ, ஒருவன் காணவும் அறியவும் முடியும்! அங்ஙனமன்றி, எல்லாமாய் எங்குமாய், எப்போதுமாய் இருக்கும் ஒரு பொருளை எங்குசென்று எப்படி—எப்போது—யார்—எதற்காகக்காண்பது? தரையில் இல்லாத சிப்பிமுத்துக் கடலில் இருப்பதால், அதனை ஒருவன் ஆண்டுச்சென்று காண்பது இயல்பே! ஆனால், தரையிலும்—கடலிலும்—உலகிலுள்ள அனைத்திலும் என்றும் ஒரே தன்மையாய் நிறைந்து நிலைத்து நிற்கும் ஒரு பொருளை யார் காண்பது? எங்கேகாண்பது? எதற்காகக் காண்பது? காண்பானும்-காட்டுவானும், காட்டப்படும் பொருளும் ஒன்றே என்று கூறியபின்; காண ஒருவனும், காட்ட ஒருவனும் காட்டப்படும் பொருள் ஒன்றும் வேறுதனித்தனியாகஇருக்கமுடியுமா? இருப்பானேன்?

இனி, இப்போது, அந்தராத்மா என ஒன்று இருப்பதாகவும், அது சிலரிடம் மட்டுமே வந்துபேசிப் போவதாகவும் சொல்லப்படுகிறது.இந்த அந்தராத்மாவுக்கும் மதநூலில்பேசப்படும் கடவுளுக்கும் ஏதாவதுவேறுபாடு இருக்கிறதாஎன்பது தெரியவில்லை. இரண்டும் ஒன்றாயோ அல்லது வெவ்வேறு இயல்பைப்பற்றியதாகவோ இருப்பதைப்பற்றிய ஆராய்ச்சியில் நாம் இறங்கவேண்டியதில்லை. ஆனால் இவற்றின் தன்மையை அறிவதே எமது நோக்கமாகும்.எனவே, ஈண்டுப் பேசப்பட்ட அந்தராத்மா, வார்தாவிலிருக்கும் தோழர் காந்தியாரிடம் அடிக்கடிவந்துபேசிப் போவதாக அவரே சொல்லுகிறார். ஆனால், அவ்வந்தராத்மா எந்த வடிவத்தில், எந்த நேரத்தில், எந்த மொழியில் அவரிடம் வந்து பேசுகின்றதென்பதை அவர் இன்னும் சொல்லவில்லை. அதற்காகநாம் அவரிடம் சினந்துகொள்ளவுமில்லை. ஆனால், நாம் அந்த அந்தராத்மாவிடம் சாட்டும் குற்றம் ஒன்றே ஒன்றுதான்; அதாவது, அந்த அந்தராத்மா இருக்கிற இடம் வார்தாவுக்கு அணித்தாயும், ஈரோட்டுக்குத் தொலைவாகவுமா இருக்கிறதென்றஐயமே எம்பால் எழுகின்றது. வார்தாக் காந்தியாரிடம் வந்துபேசும்அந்தஅந்தர-ஆத்மா ஈரோட்டு இராமசாமியிடம் ஏன் வருவதில்லை? ஈரோட்டு இராமசாமிகெட்டவர் என்றால், அவரைத் திருத்துவது அந்த அந்தராத்மாவின் வேலைதானே! திருத்தமுடியாதாயின், அப்படிப்பட்டஒருவனை, அது கடவுளாயினும் சரி, அந்தராத்மாவாயினும் சரி, ஏன்படைத்தது? ஒருவன் செய்யுங்குற்றத்தைத் திருத்த முடியாத ஒன்றை எல்லாம்வல்ல கடவுள் என்றோ, "இதுநல்லது, இதுகெட்டது, இதைச் செய், இதைச் செய்யாதே" என்று அறிவுபுகட்டும் அந்தராத்மா என்றோ எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? அல்லது, வார்தாக் காந்தி தப்பானவழியிற் செல்லுகிறார், அவரைத்திருத்த அந்தராத்மா அடிக்கடி அவரிடம்போய்ப் பேசுகிறது; ஈரோட்டு இராமசாமி தப்பான வழியிற்

(9-ம்பக்கம் பார்க்க)

# புரியவில்லை!

... பாதன். ...

திராவிடநாட்டை, மக்கள் எவரும் விரும்புவர்! அதனை விரும்பாதார் யாரோ!"

"அப்பா! சரியாகப் பாடத்தை ஒப்புவித்தேனா, சொல்! நீங்கள் பேசியதை நான் அப்படியே ஒப்புவித்தேனா, இல்லையா? சொல்லப்பா என்றால்,சும்மா இருக்கிறீரே! சொல்லமாட்டீரா? நான் இன்னொருதடவை, பாடத்தைச் சொல்லட்டுமா"

"திராவிடநாட்டை, மக்கள் எவரும் விரும்புவர், அதனைவிரும்பாதார்யாரோ' அப்பா! நீங்கள் சேலத்திலே, இதைச் சொன்னபோது, அந்த ஜனங்களுக்கு எவ்வளவு ஆனந்தம், கைவலிக்குமோ வலிக்காதோ தெரியவில்லை, அப்படிக் கைதட்டினார்களே!"

"சைமன்! போதுமாபார், அறிக்கை! என்றார், விசுவநாதன், எதிரிலே இருந்த நண்பரை நோக்கி. பாடம் ஒப்புவித்து விட்டு அதுசரியாக இருக்கிறதா என்று கேட்டுப் பதில் எதும் பெறாமலிருந்த குழந்தையின் முகம் வாட்டமடைந்தது. அப்பாசொன்னதை அப்படியே தவறாமல்சொன்னேம், அவர் ஏனோ அதற்காக நம்மைப்பாராட்டாமல், ஏதோ எழுதிக் கொண்டே இருக்கிறார், என்று குழந்தை உள்ளம்குமுறலாயிற்று. அக்குழந்தை அறியுமா, சேலத்திற்குப் பிறகு, சிந்தனையையும் செயலையும் வேறு பாதைக்குச் செலுத்தத் தந்தை தீர்மானித்தார் என்பதை. சேலத்திலேகூடிய மாநாட்டிலே, "திராவிடநாடு, திராவிடநாடு என்றால் நான் என்னமோஏதோ என்றுஎண்ணிக் கொண்டிருந்தேன், தமிழகம், ஆந்திரம், கேரளம், என்ற மாவட்டங்கள் தனித் தனி அமைக்கப்படும், இவைகள் ஒருகூட்டாட்சியிலே இணைக்கப்படும், இதற்கே திராவிடநாடு என்றுபொருள் என இப்போது கூறிவிட்டார்கள், எனக்கு இப்போது புரிந்துவிட்டது. திராவிடநாடு அவசியமாகத்தேவை. அதனை மக்கள் அனைவரும் விரும்புவர், விரும்பாதார் யாரோ!"—என்று அவர் பேசியதையும் அந்தப் பேச்சினைக்கேட்டுப் பேருவகை அடைந்த அப்பெருங்கூட்டம், பெருத்த ஆரவாரமிட்டுத்தமது மகிழ்ச்சியைத்தெரிவித்ததையும் கண்டகுழந்தையின் உள்ளத்திலே, இந்த உயர்ந்த வாசகம் அழகாகப் பதிந்துவிட்டது, ஆகவேதான், குழந்தை மழலை இன்பத்துடன், கூறிற்று, திராவிடநாட்டை மக்கள் அனைவரும் விரும்புவர், அதனை விரும்பாதார் யாரோ! என்று. பாவம்! குழந்தைக்குத் தெரியாது, இந்தக்குளிர்மொழி பேசியவர், மீண்டும், முருக்கமரமேறிக் கொண்டார் என்பது.

திராவிடநாடு என்பது எனக்குவிளங்கவில்லை! பெரியார் ஏன் தமிழ்நாடு என்று கூறத்தயங்குகிறாரோ தெரியவில்லை. இது என்ன ஆகுமோ என்பதுஎனக்குத்தெரியவில்லை. திராவிடநாடு திராவிடநாடு என்று, தமிழ்நாட்டிலே மட்டுமே பெரியார் பேசிக்கொண்டிருக்கும் காரணம் எனக்குத் தெரியவில்லை! இந்தத்தோரணையிலே இருந்தது அறிக்கை. படித்த நண்பருக்கு, சந்தேகம் பிறந்தது. இப்படி, எனக்கு இதுதெரியவில்லை, இது புரியவில்லை, இதுவிளங்கவில்லை, என்று ஒரு அறிக்கையிலே எழுதினால், எந்தப் பத்திரிகைதான் வெளியிடும்? திட்டமான ஒரு முடிவு, ஒரு தீர்மானத்தைப்பற்றியவிளக்கம், ஒரு அறிவுரை இவைகளைத்தானே அறிக்கைகள் என்று எந்தப்பத்திரிகையும் வெளியிடும். இவர் தயாரித்திருக்கும் அறிக்கையோ, "இல்லை அந்தாதியாக" இருக்கிறதே, இதனை யார்வெளியிடுவார்கள் என்பது எனக்குத் தெரியவில்லையே, என்று அந்த அறிக்கையைப் படித்த தோழர் எண்ணினார்.

"அறிக்கையை வெளியிட்டதும், ஒரு பெரிய பரபரப்பு உண்டாகும்"

"ஆமாம், அதற்கென்ன சந்தேகமா?"

"பதில்கூறவே முடியாது இதற்கு";

"ஆமாம்! பதிலாவது அவர்கள் சொல்வதாவது"

"சண்டேஅப்சர்வரிலே இதுபற்றித் தலையங்கம் வரும்".

"அதற்கென்ன! இதுபற்றிஎழுதா விட்டால் முடியுமா?"

"ஆனால் ஒரு விஷயம். நீ இரகசியமாகவைத்துக்கொள். அந்த ஆசாமிக்கு ஆந்திரர் செல்வாக்கிலேதான் பிரியம். தமிழர்களை நம்புவதில்லை."

"ஆமாம்! நானும் அப்படித்தான் நினைக்கிறேன்"

"ஆனால், என்னசெய்வது, இந்தச் சமயத்திலே நமக்கு அந்த ஆள் தேவை. உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்"

"ஆமாம்! சமயத்தை நழுவவிடலாமா?"

"இந்த அறிக்கை வெளிவந்தவுடனே, பார், ஒரு துள்ளு துள்ளுவார் நமது மறை அண்ணல்!"

"அதுயார் மறைந்திருக்கிற அண்ணல்? புரியவில்லையே"

"நாதன்!"

"ஓ! அவரா? ஆமாம். அவர் நம்மோடு கடைசிவரையிலே இருப்பாரா?"

"இருக்கிறவரையிலே இலாபம்!"

"இலாபம் யாருக்கு?"

"அவர் தனக்கு என்று எண்ணுவார், நாம் நமக்கு என்று எண்ணுவோம்"

"எனக்கு அங்கேதான் கொஞ்சம் புரியவில்லை. தெளிவாகத் தெரியவில்லை"

இந்த உரையாடலும் முடிந்தது.

"எங்கே வீரா! இது நடந்தது? நீ எழுதியிருப்பதைப்பார்த்தால், திருச்சித் தோழர் K. A. P. விசுவநாதன்விட்ட அறிக்கையை ஒட்டியதாகத்தெரிகிறதே. அவர் வீட்டிலேயா, இந்தச் சம்பவம் நடந்தது" என்று நான்கேட்டேன். "அப்படித்தான் நினைத்துக்கொள்ளேன்" என்றான்வீரன். இவனுக்கு எப்படி, இந்தச் சம்பவம் தெரிந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. வற்புறுத்திக்கேட்டால், அந்த வம்புக்காரவீரன், இப்படிஎல்லாம் அங்கே நடந்திருக்கும் பேச்சு என்று நான் யூகிக்கிறேன் என்று கூறிவிடுவான். உண்மையிலேயே, நாமும்கூடக் கொஞ்சம் யோசித்தால், வீரன்செய்த யூகம் சரியாகத்தான்இருக்கும் என்ற முடிவுக்குத் தான்வரக்கூடும். அதுகிடக்கட்டும், சேலத்திலே திராவிடநாடு என்ற பிரச்சினை எனக்குப்புரிந்தது என்றுகூறிய கி. ஆ. பே. இப்போது எனக்கு அந்தப் பிரச்னை புரியவில்லை என்று அறிக்கைவிடுகிறாரே. இது ஏன், என்று எனக்குப் புரியவில்லை—என்று நான் கூறினேன்.

"உனக்குமாபுரியவில்லை, பாதா! எனக்குங்கூடத்தான் புரியவில்லை!" என்றார், நமது புரட்சிக்கவி பாரதிதாசன்!!

"ஒரு விஷயம்தெரியுமா பாதா! திராவிடநாட்டுப்பண் அமைத்தேனே "வாழ்க! வாழ்கவே! வளமார் எமது திராவிடநாடு" என்ற பண், அது ஏன் எழுதினேன் தெரியுமா?"

"தெரியாதே"

"கேள்! சர். செல்வம், திராவிடநாட்டுப் பண் ஒன்று என்னைக்கொண்டு அமைத்துத்தரச்சொன்னதாக, நமது K. A. P. விசுவநாதன்என்னிடம் கூறினார், அதனாலேதான் நான் திராவிடநாட்டுப் பண் பாடினேன்."

"அப்படியா? அப்படி என்றால், நண்பர் K. A. P. திராவிடநாடு என்ற பிரச்னையை முதலிலேயே ஆதரித்தார் என்றுதான் அர்த்தமாகிறது"

(7ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 1—10—44 ஞாயிறு


## வந்தார்! தந்தார்!!

ஆம்! வந்தார், தந்தார்! சாதுக்களும்சங்கராச்சாரிகளும், பண்டாரங்களும், பண்டக்களும், வந்தால், தீரும் நிகண்டும் தருவர், ஆசிகூறுவர், எதற்கு? காசுபறிக்க. வீரன்வந்தால், என்ன தருவான்? வீணருக்குச்சூடு, வீரருக்குப் புன்னகை!! டாக்டர் அம்பெத்கார், சென்னைவந்தார், கசையடிதந்தார் ஆரியக்கூத்தாடும் ஆரியருக்கு. புன்னகை தந்தார் பகுத்தறிவு இயக்கத்துக்கு. சென்னை ஆரியப் பத்திரிகைகள் அலறுகின்றன, அகராதியைப்புரட்டிப்புரட்டித்தேடுகின்றனகடுமொழிகளுக்காக! டாக்டர் அம்பெத்கார், வந்தார், தந்தார், சிரித்தார், இந்த அந்திய காலத்திலே வாழும் ஆரிய முறையின் குரலைக் கேட்டு. வசைதந்தார் என்றோம், ஆதாரமின்றியா எனில், இல்லை, வரலாற்றுஆதாரத்துடன், வகையுடன்!

பண்டை நாள்தொட்டு இன்றுவரை வேதகாலமுதற்கொண்டு வெள்ளையன் காலம்வரை, நவநந்தர்கள் நாள்தொட்டு, நமது காலம்வரையிலே, இந்நாட்டிலே, பார்ப்பனகுலம், ஆளும் வர்க்கமாக இருந்து, மற்றவரை ஆட்டிப்படைத்து வரும் அநீதியை, டாக்டர் அம்பெத்கார் அழகுற எடுத்துரைத்தார்.

“ஆளும் கூட்டமே! ஆரியக்கூட்டமே! அறிவுக்கு ஒவ்வாத சிந்தனையும், ஆண்மையின்பாற்படாத செயலும் கொண்ட, உங்கள் செய்தியை டாக்டர் அம்பெத்கார் சென்னை வந்தார், நாட்டவருக்கு எடுத்துத்தந்தார்! கேட்டீர் அம்மொழியை, கூட்டிலே கூடிக்கொண்டு கூவுகிறீர், நாட்டுநிலை அறியாமல்! எட்டுச்சுரை இன்னமும் கறிக்காகும் என்றுஎண்ணுகிறீர், ஏமாறுவீர் இனி, என்று கூறுகிறோம். சீறிப்பயன் இல்லை! இந்த டாக்டர் இப்படி எல்லாம் பேசுவதா என்று எழுதிப்பயனில்லை! கண்டனத் தலையங்கத்தைத் தீட்டிப் பயனில்லை, அவர்வந்தார், யாருக்கு எதைத்தரவேண்டுமோ தந்தார், சென்றார்!

அவர்மட்டுமா, அறிவும் அதற்கு அரணான ஆண்மையும் கொண்டவர் எவரும் உள்ளொன்று வைத்துப்புறமொன்றுபேசார்! ஆரியத்தால் விளைந்த கேடுகளை எடுத்துக்கூறக்கூசார்.

இன்றளவும் ஒருவனை ஒருவன் தொட்டால் தீட்டு என்றுகூறுகிறாயே, தோழா, இது நல்லறிவா, நற்பண்பா, நாடாளும் தகுதி இதுவாகுமா, உன்னை நம்பிவாழப் போமா, நாட்டு ஆட்சியை இச்சமய போக்கிரிகளிடம் தரமுடியுமா, அவர்களுக்கு ஏது ஆளும்தகுதி, ஊரைப் பிரித்துவைத்து ஊத்தைச் சரீரத்தை வளர்க்கும் மார்க்கத்தைத்தேடும், உலுத்தர்களுக்கா ஊராளும் உரிமை, என்று கேட்டாரே டாக்டர் அம்பெத்கார். ஆரிய சிரேஷ்டர்களே! இட்சவாகுபரம்பரையினரே! மனுமாந்தாதாகாலத்து மமதையை மறக்காதிருக்கும் மகானுபாவர்களே! சீறுவது பலன்தராது. சிந்தனைக்கு வேலை கொடுத்துப்பாருங்கள்! அவர் சொல்லியதிலே, எதை மறுக்கமுடியும் உங்களால், என்று கேட்கிறோம், டாக்டரைக்கண்டிக்கும் எழுத்தாளர்களை. கண்டனக் கணைகளுக்கு நெடுநாட்களுக்கு முன்பே தப்பிக்கொண்ட டாக்டர் அம்பெத்கார் மீது இன்று அந்தப் பழய பாணத்தை ஏவிப்பயன்என்ன, எண்ணிப்பாருங்கள், உங்கள் இயல்பை அவர் படம் பிடித்துக்காட்டியது தவறாகுமா என்று.

பார்ப்பனியத்து வைரியாகப், புரட்சி இயக்கமாக, புத்தமார்க்கம் தோன்றியதையும், அந்தப் புதுஇயக்கம் நசித்துவிட்டதால், பழயபடி பார்ப்பனியம், தலைதூக்கி ஆடியதையும், டாக்டர் தெளிவாகக்கூறினார். வரலாறு அறிந்தோர் இதனை நன்கு அறிவர். இதனைத்தைரியமாகச், சென்னைப்பத்திரிகை உலகின் நிலைதெரிந்தும் அதுபற்றித்துளியும் கவலைப்படாமல், எடுத்துக்காட்டிய டாக்டர் அம்பெத்காரரின் ஆண்மையைநாம் பாராட்டுகிறோம். பகுத்தறிவாளன், பயங்கொள்ளியல்ல! புகழ்மாலையும் இகழ்ச்சி ஓலையும் இரண்டாலும் அவனை மயக்கவோ, மருட்டவோ முடியாது. மனதிற்குச்சரி என்று பட்டதைத் திட்டமாக வெளியிட அவன் அஞ்சான். இந்தஇயல்பிலே தேறிய டாக்டர் அம்பெத்காரிடம், ஆரியப் பத்திரிகைகள் சீறினால் என்ன, சிரித்தால் என்ன. அவர் வந்தார் தரவேண்டியதைத் தந்தார், அடிபட்ட மந்தி ஆஊ எனக்கூவிக், கிளைக்குக்கிளை தாவி ஆலின்விழுதைப் பாம்பென எண்ணிக்கூவி, பாம்பைபழுதையென்றுகருதி பிடித்துக்கடிபட்டு ஓடுவதுபோலக், கூட்டு உடைபடுகிறதே என்ற கலக்கத்தால் கூவும் பத்திரிகைகளை நாம் பொருட்படுத்தவில்லை, நமது டாக்டர் அம்பெத்கார், சட்டைசெய்பவரல்ல. அந்தப் பத்திரிகைகள், டாக்டர் அம்பெத்காரிடம், அன்புகாட்டுமென்றோ நேர்மையிலேமனம் செலுத்துமென்றோ நாம் என்றும் எதிர்பார்த்ததில்லை.. பேய்ச்சுரையைநாம் இன்புடைத்து என்று கருதோம், பேதைமை கொண்டவனிடம் பெருங்குணத்தைக் காணமுடியும் என்றுஎண்ணோம். ஆரியப் பத்திரிகைகளிடமிருந்து, புரட்சிவீரர்கள் ஆசியையோ ஆதரவையோ எதிர்பார்க்க மாட்டார்கள். எனவே, டாக்டர் அம்பெத்கார், இந்த ஏடுகளைப்பற்றிக்கவலையின்றி, வந்தார், தந்தார்! தழும்பைத்தடவிக்கொண்டிருக்கும் அந்தவர்க்கமும், அது இன்றுவரை கொண்டுள்ள முறைக்கு முடிவுகாலம் விரைந்து வருவது தெரிந்து முகாரிபாடுகிறது. பாடட்டும்! பக்கமேளமும் தேடட்டும்! நாம் கவலைகொள்ளவில்லை, நாம் களிப்படைகிறோம், நமது பகுத்தறிவுச் சிங்கம், டாக்டர் அம்பெத்கார், வந்தார், வஞ்சனைக்காரருக்கு வட்டியும் முதலுமாகத் திருப்பித் தந்தார் என்பதை எண்ணி!

---

## பொய்க்கால் குதிரை!

பெரியார்மீது படையெடுக்க வேண்டுமென்று விரும்பும், பதவிப்படை; ஒரு பொய்க்கால் குதிரையைத் தயாரித்திருக்கிறது. பெரியாருக்கும் ஜனாப் ஜின்னா அவர்களுக்கும் நடந்த கடிதப்போக்குவரத்தைத் திரித்துக்கூறியும், காந்தி—ஜின்னா சந்திப்பு என்ற தலைப்பிலே குடிஅரசில் வெளியான தலையங்கத்தைத் திரித்து எழுதியும், பெரியார் ஜின்னா தகராறு” வந்துவிட்டது, என்றுகூறி, முஸ்லீம்களைப், பெரியாரிடமிருந்து பிரித்துவிடலாம், என்றுமனப்பால்குடிக்கிறது அந்தப்பதவிப்படை. இந்தமுயற்சி, அந்தப்படைக்கு மூலபலமும்இல்லை,மூளைவலிவும் சூன்யம் என்பதை விளக்குகிறது என்றேநாம் கருதுகிறோம்.

திராவிடநாட்டிலே, முஸ்லீம்களின் சார்பிலே, ஆதரவுகாட்டியவர், பெரியார் என்றும், அந்த ஆதரவு நிலைத்தே இருக்கும், இடையே இச்சகம்பேசிநச்சரவை அசைக்கும் கூட்டம் பிளவு உண்டாக்க முயன்றால், அதுபலிக்காது. பாகிஸ்தான் பிரச்னையைத் திராவிடநாட்டிலே, முஸ்லிம்கள் உணரச்செய்யப்பெரியார் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியை, இஸ்லாமியர் மறக்கமுடியாது. இந்தச் செய்நன்றியை ஆதாரமாகக்கொண்டே, பெரியாருடன் முஸ்லீம்கள் என்றென்றும் நேசமாக இருப்பார்கள் என்று நாம் கூறவில்லை, நேசம் பரிசு அல்ல என்பது நமக்குத் தெரியுமாதலால். வேறு எக்காரணம்பற்றி இங்ஙனம்கூறுகிறோம்எனில், முஸ்லீம்கள், திராவிடர்கள், ஆகவேஅவர்கள் திராவிடத்தலைவர் பெரியார் இராமசாமி அவர்களிடமும், திராவிடநாட்டினிடமும், திராவிடநாடு திராவிடருக்கே என்ற கோட்பாட்டினிடமும், பற்றுக்கொள்ளாதிருக்க முடியாது. எனவே, பெரியார்மீதுபழிகூறிப், பகைவளர்த்துவிடுவோமா என்று சிறுமதிகொண்டு சிலர் சேட்டை புரிந்தால், அச்சேட்டைக்குச் செவிதராது, இருக்கவேண்டியது, நமது தோழர்களின் கடமை என்போம். பெரியாரை எதிர்க்க இதுபோன்ற பொய்க்கால் குதிரைகளைத் தயாரிக்கும் பொச்சரிப்புக்காரர்கள், தங்கள் சூழ்ச்சி சிதைவதைக்காணப் போகி

றார்கள் விரைவில்! ஆனால், அத்துடன் சும்மா இருப்பாரோ? இரார்! வேறுபல சாடுகளைத் தயாரிப்பார். இது போலச் செய்வதன்றி வேறொன்று அறியாத அந்தப் பதவிப்படையிடம், நாம் பரிதாபப் படுகிறோம். ஏனோவீண்வேலை!

---

## புரியவில்லை!

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

“அதுதானே தம்பி வேடிக்கை! திராவிடநாட்டுப் பிரச்னையை ஆதரித்து, என்னைத்தூண்டித், திராவிடநாட்டுப் பண் அமைக்கச்செய்தவர், இப்போது, அதனை மறுக்கிறாரே, இதன் காரணம் எனக்குப் புரியவில்லையே”

இது எனக்கும் புரட்சிக்கவிக்கும் நடந்த உரையாடல். உண்மையிலே நமக்கெல்லாம் புரியத்தான் இல்லை, நண்பர் கே. எ. பி. அவர்களின் மனப்போக்கு! யார்கண்டார்கள் எந்தப்புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ?

“அவர் விஷயம் இருக்கட்டும் சார்! இதோ, இந்தக்கந்தனுக்குக்காரமான சாப்பாடு பிடிப்பதில்லை, ஏன் என்று கேளுங்கள்? இது ஒரு தோழரின்குறுக்குச்சால் “ஏன் காரம் பிடிக்காது?” இது என்கேள்வி, அந்த நண்பனை நோக்கி, “காரச்சாப்பாடு, சார், அது, காரச்சாபாடு இருக்கிறதே அது, எனக்குப்பிடிக்காது. அப்படித்தான்” இது, காரச்சாப்பாடு பிடிக்காது, என்பதற்குப், பதிலுரை என்று அந்தத்தோழர் கருதினார்,

அடே! ஏனப்பா உனக்குக் காரச்சாப்பாடு பிடிப்பதில்லை, காரணத்தைச்சொல் என்றால், திருப்பித்திருப்பி காரம் பிடிக்காது, காரம் பிடிக்காது என்று சொல்கிறாயே, காரணத்தைச் சொல், என்று சற்றுக்காரமாகக் கேட்டார் இன்னொரு தோழர், காரப்பேச்சும் தனக்குப்பிடிக்காது என்பதை அந்த நண்பர், கூறினார், பேச்சால் அல்ல, விழியால். மீண்டும் கேட்டேன், அவரை, அவர் பிறகு கூறினார், தனக்கு நாக்கிலே புண்இருப்பதை. எனக்கு விஷயம் விளங்கிற்று. வாயிலே புண் இருப்பதால் அந்தத் தோழருக்குக் காரச்சாப்பாடு பிடிக்கவில்லை என்றஉண்மை, பரிதாபட்டேன்.

“அது இருக்கட்டும், நல்ல விஷயமாகப்பேசுவோம், ஏன் சில வித்வான்கள், இன்னமும் தமிழ் இசையை எதிர்க்கிறார்கள்” என்றுவேறு பிரச்சினையைத் துவக்கினார் இசைப்பிரியர். “பிரமாதமான கேள்வி, இது தெரியவில்லையா உனக்கு? தமிழ் இசையை ஏன் எதிர்க்கிறான் என்றால், அவனுக்குத் தமிழிலே சரியாகப் பாடம் கிடையாது, பாடம் செய்துகொள்வோம் என்ற நம்பிக்கையும் கிடையாது, முடியாது அவனால், ஆகவே கூடாது என்கிறான்,” என்றார் மயமேறோர் அன்பர்.

“அப்படி என்றால், தமிழ் இசையால் சங்கீதக் கலை கெட்டுவிடும் என்று கூறுவது வெறும் புரட்டு என்று சொல்லுங்கள்., என்றார் இசைப்பிரியர், “சந்தேகம் என்ன இதிலே! உள்ளே ஒரு எண்ணம், வெளியே பேசுவதோ, வேறு ஒன்று” என்று பதிலுரைத்தார் ஒரு தோழர்.

“நமது கே. எ. பி. விசுவநாதனைப் போல!” என்று முடித்தார் இன்னொருவர். சிரிப்பு அதிர்வெடிபோலக் கிளம்பிற்று. அந்தத்தோழர், “சேலத்திலே நடைபெற்ற மாநாட்டிலே, நண்பர் கே. எ. பி. யின்மனம்புண்ணாகி விட்டது. புண்ணான மனதுக்குத், திராவிட நாடு பிரிவினைபோன்ற காரம் பிடிக்கவில்லை. அதனை வெளியே கூறமுடியாமல், எப்படித்தமிழிலே தன்னால் சரியாகப்பாட முடியாது என்று எண்ணுகிற இசைவாணன், அதை வெளியே சொல்வது வெட்கக்கேடு என்று எண்ணித்தமிழிலே பாடினால் சங்கீதக் கலையே கெட்டுவிடும் என்று வெளிக்குப் பேசுகிறானோ, அதுபோலத்தான் திருச்சித் தோழரும், மனதிலே இருக்கும் புண்ணை மறைத்துக் கொண்டு, தமக்குத் திராவிட நாட்டுப் பிரச்னை புரியவில்லை என்று சாக்குக் கூறுகிறார், இது தெரியவில்லையா?” என்றார், பலரும் சிரித்தனர். மனப்புண் உண்டாகக் காரணம்?” என்று பேச்சை மீண்டும் ஆரம்பிததார் ஒரு தோழர்.

“உனக்கு ஏனப்பா. நாக்கிலே புண் வந்தது?” என்று நான் கேட்டேன், நாவிலே புண்கொண்ட நண்பனை.

“தெரியவில்லை! புரியவில்லை” என்றான் அந்தத் தோழன்.

---

## லக்னோவிலே பெரியாருக்கு அழைப்பு.

பின்னணியிலேசமுதாயத்திலேதள்ளப்பட்டு, உயர்ஜாதி இந்துக்கள் என்போரால் கொடுமைப்படுத்தப் பட்டுப்படிப்பிலே, அதிகாரத்திலே, சமுதாய அமைப்பிலே, பொருளாதாரத்திலே, பின்னணியிலே நிறுத்தப்பட்டு, சூத்ராக இருக்கும் வகுப்பார்களின் முன்னேற்றம் கருதி, லக்னோவில் (லட்சுமணபுரியில்) ஓர்மாநாடு கூட்ட முயற்சி எடுத்துக்கொண்டுள்ள கழகத்தார், பெரியார் இராமசாமி அவர்கள் அதற்கு வந்திருந்து நடத்திக்கொடுக்கவேண்டுமென்று அழைப்பு விடுத்திருக்கிறார்கள். பெரியார் அதன்படிலக்னோ போகும்போது, மராட்டிய நாட்டிற்கும், ஆந்திராவுக்கும் சென்றுவரக்கூடும் என்று தெரிகிறது. மராட்டிய மண்டலத்திலே பார்ப்பனிய எதிர்ப்புணர்ச்சிபலமாக இருப்பதாகவும், அந்தப்பகுதியிலே பெரியார்வந்துபோகவேண்டும் என்றும், டாக்டர் அம்பெத்கார் பெரியாரை வற்புறுத்தி யிருப்பதாகவும் தெரிகிறது.

## கரூர் தாலூகா திராவிடர் மாநாடு.

கரூர் தாலுக்கா திராவிடர் மாநாடு, கரூர் அம்பிகை டாக்கீசில், 24ந்தேதி காலை, தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில் நடைபெற்றது. மாநாட்டிலே தோழர் நெடுஞ்செழியன் கொடியேற்றுவிழா வாற்றினார், திருப்பூர்த் தோழர் S. R. சுப்பிரமணியம் திறப்புவிழா வாற்றினார். பெரியார் திராவிடநாடு படத்திறப்புவிழா வாற்றினார், பெரியார் படத்தைத் தோழர் அன்பழகன் அவர்களும், நாகம்மையார் படத்தைத் தோழியர் சரசுவதி கண்ணப்பன் (பாரதிதாசன் அவர்கள் புதல்வி) அவர்களும், சர். செல்வம் படத்தைத் தோழர் P. சண்முகவேலாயுதம் அவர்களும், பா[illegible] படத்தைத்தோழர் ஜனார்த்தனம் அவர்களும் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தீர்மானங்களின்போது தோழர்கள்பி.கே.ஐயா, குமாரவேல், தமிழாசிரியர்கள் கண்ணப்பன், வை. பொன்னம்பலம், சண்முகசுந்தரம் ஆகியோரும் மற்றும் பலரும் விளக்கவுரையாற்றினர். மாநாடு மாலை முடிந்தபிறகு, 7-மணிக்கு மேல் ஆற்றங்கரையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அன்பழகன் அண்ணாத்துரை, நெடுஞ்செழியன் ஆகியோரும் பெரியாரும் பேசினர்.

## அம்பெத்கார்-பெரியார்சந்திப்பு.

டாக்டர் அம்பெத்கார், பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களைச் சென்னையில் 23ந்தேதி சந்தித்துப் பல்வேறு விஷயமாகப்பேசினார்.

## திராவிட மாணவர் மாநாடு

தஞ்சை

தஞ்சை மாவட்டத்திராவிட மாணவர் மாநாடு, 26-ந்தேதி காலை, தஞ்சைக் கரந்தைத்தமிழ்க் கல்லூரி மன்றலில், புரட்சிக் கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையிலே விமரிசையாக நடைபெற்றது. பெரியார், திறப்புவிழா வாற்றினார். தலைவர் பிரேரேபணையின்போது, பெரியசாமிப் புலவர் அவர்கள் பேசினார். தலைவர் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள், தமது தலைமை உரையில், அச்சம்தவிர்க்க மடைமையைவிடு, மனிதனாக அறிவுபெறு, வீரனாகப் பகுத்தறிவுபெறு, என்றகொள்கையை மிகஉயிர் உணர்ச்சியுடன்பேசி, தமிழ்மொழி வளமும் உயர்வும், மதச்சேற்றால் பாழாவதை விளக்கி, இன்பம்பெற அறம் பெறு, அறமானால் இன்பம்பெறும்ஆற்றலேயாகும் என்பதை அழகுற எடுத்துக் கூறினார். பிறகு தோழர்கள் அன்பழகன், நெடுஞ்செழியன், தவமணி, கருணாநிதி, ஜனார்த்தனம், அண்ணாதுரைஆகியோர் திராவிடர் நிலைபற்றிய பேசினர். பெரியார், வாலிபர் கடமை என்பது குறித்துப்பேசினார். நன்றி கூறலுடன் மாநாடு இனிது முடிந்தது.

# இளைஞர்களின் கடமை.

26—9—44ல் நடந்த தஞ்சைமாவட்ட திராவிட மாநாட்டில், தோழர் P. S. பாண்டியன் ஆற்றிய வரவேற்புரை.

பெரியார் அவர்களே! புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களே! தோழர்களே யாவரையும் இன்முகம் கொண்டழைக் [illegible]ட்டை வெற்றிகரமாகவும, மகிழ்ச்சிகரமாகவும்நடத்த உங்களை அன்புடனும், ஆர்வத்துடனும் அழைக்கின்றேன் வருவீர் வருவீரென்று.

இதுபோது எங்கு நோக்கினும் திராவிட மாநாடுகள் கிழமைதோறும்நடந்த[illegible]திருக்கின்றன. உரிமை முழக்கம் எங்கும் ஒலிக்கிறது. இவை ஒரு இனம்-சரிதம்கண்ட இனம் தன்மானம்பெற, தன்னரசுஎய்தத்தவிக்கின்றதுஎன்பதைத் தான்காட்டுகிறது. நளியிருமுன்னீரில் நாவாயோட்டி நானிலம்வென்ற தமிழன் அகிலும், தேக்கும், சண்பகமும், சந்தனமும் ரோம்நாட்டு நகர்வரைசென்று வாணிபம்செய்து வளம்பல பெற்றதமிழக, கிறித்துவுக்கு 5000 ஆண்டுகட்கு முன் உலக நாகரிகத்திலும் சிறந்தோங்கிய மஹேஞ்சதாரோ, ஹரப்பாவைக் கட்டியாண்ட தமிழன் இன்று உடல் மெலிந்து, உள்ளம்காய்ந்து உணர்வற்று உலவுகின்றான். அன்றுவாழ்ந்த அருமந்த வாழ்வு எங்கே? முத்துக்கொழிக்கும் பாண்டிநாடும், நெல்மணிகள் குவியும் சோழநாடும், தந்தங்கள்கிடைக்கும் சேரநாடும் எங்கே? ஓடிஒழிந்துவிட்டனவா? மறைந்துபட்டனவா? என்ன ஆயின? காரணம் விளக்கமானதுதான்.

எத்துறையிலும் ஆரியம் நம்மைஅலைத்துக் குலைத்துவருகிறது. கலைத்துறை, மதத்துறை, அரசியற்றுறை இவற்றிலெல்லாம் நாம் ஆரியத்துக்குஅடிமை. வாளுக்கஞ்சாவீர உள்ளம் தாளுக்கஞ்சுகிறது. கோட்டை கொத்தளங்களைக்கண்டு கொக்கரிக்கும்இனம்கோவில்குளங்களைக் கண்டு பணிகிறது. இன்று இளைஞர் உள்ளத்தில் புரட்சிவாடைவீச ஆரம்பித்துவிட்டது. இனி எங்கும் எழுச்சிமயமே!

மாணவர் கடமை என்ன என்பதைக் கூறிவிட்டால் நானும் என் கடமையைச் செய்துவிட்டதாகக் கூறமுடியாது. இளைஞர்கள் களங்கமற்றவர்கள். அவர்கள் மனது வெள்ளையானது. அவர்களை யாரும் ஏமாற்றிவிடலாம. புதியதை விரும்புவது எல்லோருக்கும் இயற்கை. ஆதலால்ஆவேசமானஎந்தப்புதிய கிளர்ச்சியிலும்இளைஞர்கள்ஈடுபடுவதுஇயற்கை. இளைஞர்கள் ஈடுபடும் கிளர்ச்சியை இறுதிவரையிலும் உயிருக்கு அஞ்சாமல் நின்றுநடத்தும் வீரம் படைத்தவர்கள் என்பதை யாரும்மறுக்கமுடியாது. அதிலும் நமது திராவிட இளைஞர்களிடம் நமது பரம்பரைக் குணமாகிய வீரத்தன்மை திகழ்வதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம்.

ஆனால் திராவிட மாணவர்கள் செய்யும் தியாகம்—காட்டும்வீரம் திராவிட சமுகத்தின் மானத்தைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கவேண்டும். திராவிட சமுகஎதிரிகளின் உள்ளத்தைக் கலங்கச் செய்வதாகஇருக்கவேண்டும். அவர்களுடையசூழ்ச்சிவலையைச்சின்னபின்னமாக்கப்படுவதாகஇருக்கவேண்டும். பலவகைகளிலும் மாணவர்களின் மனது அறிவைக்கவரும் வசதிபடைத்த எதிரிகளின் முயற்சியில் அகப்படாமலிருக்கவேண்டும்.

இதற்கு நாம் என்னசெய்யவேண்டும்? நமது தலைவர்கள்காட்டும் வழிகளைப் பின்பற்றுவதே சரியானதாகும். எக்காலத்தும்இளைஞர்கள்மட்டிலும்சேர்ந்து ஒரு காரியத்தைச் சாதித்துவிடமுடியாது. அல்லது முதியவர்கள் மட்டிலும் சேர்ந்து செய்துவிட முடியாது இருவரும் சேர்ந்து செய்யும் வேலைதான் பலன்தரும். வெற்றியைக் கொடுக்கும். இளைஞர்கள் சலிப்பின்றிச் செயல்புரியும் இயற்கையுடையவர்கள். முதியோர்கள் செயல்களைநடத்துவதற்கு வழிகளைஅறிந்து சரியான ஆலோசனை கூறக்கூடியவர்கள். உதாரணமாகப்படையில் எதிரியுடன் போரிடுவோர் இளைஞர்கள், இன்னின்னவாறு தாக்கவேண்டுமென்றுகூறும் தளபதிகள் முதியோர் என்று கூறலாம்.

நமது சமுக எதிரிகள் இளைஞர்களுக்குப் பல ஆசைகளைக் கூறி அவர்களைத் தீயவழிகளுட் செலுத்த முயல்கின்றனர். சுய ராஜ்யம் சம தர்மம், புரட்சி என்னும் பல பெயர்களால் இளைஞர்களின் மனதில் ஆவேச உணர்ச்சிகளைப்புகுத்தி அவர்களின் வாழ்க்கையை வீணாக்க நினைக்கின்றனர். இத்தகையவர்களின் வலையில் நமது இளைஞர்கள் விழாது எச்சரிக்கை செய்து அவர்களை நமது சமுக விடுதலைக்குப் பாடுபடும் வீரர்களாக்க நீங்கள் அனைவரும் உறுதி செய்துகொள்ள வேண்டுகிறேன்.

நாம் சரியான தலைவரைப்பெற்றிருக்கிறோம். அத்தலைவராகிய பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் இங்கேயே நமது எதிரில் வீற்றிருக்கிறார். அவர் தோற்றத்தில்-அறிவில்—ஆலோசனையில்—வழி காட்டுவதில் அனுபவம் பெற்ற முதியவர். மற்ற முதியவர்களுக்கும், நமது முதியவர்களுக்கும் ஒரு பெரிய வேற்றுமையுண்டு. மற்ற முதியவர்கள் வழிகாட்டுவதோடு நிற்பார்கள், நமது தலைவராகிய பெரியார் வழிகாட்டுவார். படையிலுள்ள இளைஞர்களுக்குள் ஒருவராக நின்று செயலும் ஆற்றுவார். இத்தகைய ஒப்பற்ற தலைவரைப் பெற்றிருக்கின்ற நாம் எளிதில் நமது போரில் வெற்றி பெறுவோம்என்பதில்ஐயமில்லை.

நமது மாபெரும் தலைவர்களின் கட்டளைகளைப் படைவீரர்களைப்போல் நிறைவேற்ற இன்றே நாம் அனைவரும் உறுதி செய்து கொள்வோம். இத்தகைய உறுதியுடன் வேலைசெய்வோமானால் எதிர் காலத்தில் நமது திராவிட சமுகம் அடிமையில்லாத சமுகமாக வாழும். ஏழை மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பிரிவினை இல்லாத ஒரே சமுகமாக விளங்கும். சாதித்திமிர், பணத்திமிர், அதிகாரத்திமிர் படைத்தவரின் ஆட்டகாசங்களால் நமது சமுகம் துன்புறாமல் காப்பாற்றப்படும். நமது சமுகம் உடல் நோயும் உளநோயும் இல்லாத ஒரு வீரசமுகமாக விளங்கும். அன்பும் இன்பமும்நமது சமுகத்தில் தாண்டவமாடும். நமது திராவிட சமுகத்தின் புகழும், நாகரிகமும், சமத்துவக்கலையும், ஒற்றுமை விளக்கும். உலகெலாம் ஒளி வீசும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் நமது பெரியார் காட்டும் வழிகளைப் பின்பற்றுவதற்கு மடிகட்டி முன்னிற்குமாறு வீரர்களாகிய உங்களிடம் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன்.

---

## வர்ணாஸ்ரம கண்டனம்.

சிதம்பரம்.

20—9—44 புதன் மாலை தோழர் S. K. சாமி அவர்கள் தலைமையில் டவுன் ஹால் தோட்டத்தில்நடந்த கூட்டத்தில், பெரியார் அவர்களின் அருந்தொண்டுகளைத்தோழர் மதியழகனும், ஆரிய-ஆதிக்கத்துக்காசவென்றே, வாதத்துக்குநிற்காத பாவபுண்ணியமும்—கடவுள் நிர்ணயமும் மலிந்துகிடப்பதைப்பற்றி தோழர் நெடுஞ்செழியன் B. A; Hons அவர்களும், பாரதிதாசன் சுவட்டைப்பற்றியாவது புதுத்துறைக்கலைகளைப் பெரும் புலமைபடைத்த தமிழ் அறிஞர்கள் இயற்றித்தர வாராதிருப்பது எளியமக்கள்கூட இயலாமையைக் காணும்படியாகநேர்கிறது என்பதாகத்தோழர் அன்பழகன், B. A; Hons அவர்களும் பேசினர். தலைவர் முடிவுரையில் திராவிடர்களின் ஏமாந்த தன்மைபலவற்றை எடுத்து விளக்கிஇந்நகரில்நடைபெறவிருக்கும் வர்ணாஸ்ரம மகாநாட்டைப் பொதுமக்கள் கண்டிப்பதாக ஒரு தீர்மானமும், சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம்என மாறியதை ஆதரித்து ஒரு தீர்மானமும் நிறைவேறியபின், நன்றிகூறலுடன் பொதுக் கூட்டம் இனிது முடிந்தது.

## கட்சியில்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதே இல்லை, அந்தராத்மா அவரிடம் வருவதுமில்லை என்றாவது சொல்ல வேண்டாமா? இந்த மதத்துக்காகவும் கடவுளுக்காகவும் வக்காலத்து வாங்கிப் பேசும் கண்ணியர்கள்.

இனி, மக்கள் தங்களுக்குவேண்டுவனவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள்எல்லாம், கடவுளின் திருவருள் ஒன்றினாலேயே முடிகின்றனவென்றால், சில முயற்சிகள் கைகூடிவருவதும்,சிலகைகூடாதொழிவதும் ஏனோ? இதற்கு, மக்களிற் சிலர், தங்கட்கு வேண்டப்படாததும், முடியாததுமானகாரியங்களில் இறங்கிவிடுவதால் அக்காரியங்களுக்குக்கடவுளின் திருவருள் கிடைப்பதில்லை என்ற விடை இறுக்கப்படுகின்றது. அங்ஙனமாயின், மக்களிற் சிலருக்கு வேண்டப்படாததும் முடியாததுமான காரியங்களைச் செய்யவேண்டுமென்றஎண்ணத்தை அவர்களுக்கு உண்டாக்கியவர் அணுவுக்கணுவான அந்தக் கடவுள்தானே! அத்தகைய எண்ணங்கள் மக்கள்பால் உண்டாவதற்குக் கடவுள் பொறுப்பாளியாகமாட்டாரென்றால், கடவுளுக்கும் மக்களுக்கும் யாதாயினும் தொடர்பிருக்கமுடியுமா? ஒரு காரியம் கடவுள் திருவருளாலும் இன்னொரு காரியம் கடவுளுக்குத் தெரியாமலும் நடைபெறுகிறதென்றால், “அறிவுக்கறிவாய்நின்று அனைத்தையும்செய்வதும் செய்விப்பதும் கடவுள் ஒருவரே” என்னும் ஆகமக்கூற்றுக்கு ஆதாரமென்ன? மக்களின் அறிவுக்கறிவாய், அதாவது தவறானவழியிற் செலுத்தப்படும் மக்களின் அறிவை, அங்ஙனஞ்செல்லவிடாது தடுத்து, நல்லவழியிற்செலுத்தும் நல்லறிவாயுள்ளநல்லகடவுளுக்குத்தெரியாமலோ அன்றித் தெரியாதென்று கருதியோ ஒரு காரியத்தை மக்களாற்செய்யமுடியுமா? அங்ஙனம் செய்யமுடியுமானால், “அறிவுக்கறி” வென்னும் ஆகமக்கூற்றும், கடவுட்கொள்கையைநிலைநாட்ட எழுந்தஎனைமத நூற்களிற் கூறப்பட்ட அனைத்தும் பொய்யெனக்கூறும் பகுத்தறிவாளன் மீதுசீறிச்சினப்பது ஏனோ?

இனித், திராவிட மக்களுக்கு ஒரு கடவுளும், அக்கடவுள் இலக்கணத்தைக் கூறும் வேத ஆகமங்களும் இருக்குமானால்,அந்தக்கடவுள் திராவிடமொழிகளில் ஒன்றையாவது, அல்லதுதிராவிட மொழிகளின் தாயகமான தமிழ்மொழியையாவது பேசத்தெரிந்தவராயும், அவர் இலக்கணத்தைக் கூறும் வேதாகமங்கள் திராவிடமொழியிலும், அவற்றை ஆக்கியவர்கள் திராவிடர்களாயுமன்றோ இருத்தல் வேண்டும்! அப்படியன்று, திராவிட மக்களே வடமொழியைக்கற்று அம்மொழியில் திராவிடர்க்குரிய வேதாகமங்களை எழுதிக்கடவுள் இயல்பை விளக்கினர் என்பதாகச் சிலர் கூறுவரேல், அக்கூற்று ஆராய்ச்சிக்கு நில்லாத அழுக்குரையாம் என்று ஒதுக்கப்படும். ஏனென்றால்,இன்றைய உலகிலே, பல மதங்களும், அவற்றைக் குறிக்கும் பல கடவுளரும், அவர்களின் இலக்கணங்களை விளக்கும் பல நூல்களும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாம் அந்தந்த நாட்டு மக்களால், அந்தந்த நாட்டுமொழிகளிலேயே உண்டாக்கப்பட்டிருப்பது கண்கூடு. எடுத்துக்காட்டாக, கிறித்தவமதக்கோட்பாடுகள் லத்தீன் மொழியிலும், மகம்மதிய (ஸ்லாம்) மதக்கோட்பாடுகள் அரபிமொழியிலும். புத்தமதக்கோட்பாடுகள் பாலி மொழியிலுமே முதன்முதல் செய்யப்பட்டனவாகும் என்பதைஎவரே மறுக்க முடியும்! ஆனால், திராவிடரின் மதங்கள் என்று சிலரால் மானமற்றுச் சொல்லப்படும் சைவம் வைணவம் முதலான மதங்களின் உண்மைகளைத் திராவிடமொழியிற் செய்யாமல் வடமொழியிற் செய்தனர் என்று சொல்லும் சில தம்மை மறந்தாரின் கூற்றுக், கீழேவிழுந்தும் மீசையிலே மண் ஒட்டவில்லை, என்னுங்கூற்றையே ஒத்திருக்கிறது.

இனி, இச்சொல்லப்பட்ட வேதாகமங்களில், சைவத்தையும் அதன் தலைவனான சிவனையும்; வைணவத்தையும் அதன் தலைவனான திருமாலையும் குறித்து அவர்தம் இயல்புகளை விளக்கும் நூல் “இதுதான்” என்று கொள்வதற்கு, பைபிள்—குரான்போன்ற தனி நூல் ஏதாவது வடமொழியில் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. வேதங்கள்—ஆகமங்கள், உபநிடதங்கள்-இதிகாசங்கள்—புராணங்கள் தேவார-திருவாசக—பிரபந்தங்கள் இன்னும் பல்வேறு வகைப்பட்டநூல்கள் நூற்றுக்கணக்கானவை, இச்சைவ—வைணவ மதங்களுக்கு ஆதாரமாகநின்று இவ்விரு மதங்களையும் குறிக்கும் கடவுளரைப்பற்றிய இலக்கணங்களை விளக்கமின்றி விளக்கிக்கொண்டு நிற்பதோடு, சைவ-வைணவ உயர்வு தாழ்வுப்போட்டி காரணமாக உண்டாக்கப்படும் நூல்கள் பல அன்றுமுதல் இன்றுவரை வெளிவந்துகொண்டும் இருக்கின்றன. இதனால், சைவம் பெரிதா? வைணவம் பெரிதா? இவ்விரண்டில் எதைப்பின்பற்றுவது? என்பனபோன்ற ஐயப்பாடுகளை நீக்கிக்கொள்வதற்குக் கருவி எதுவுங்காணமுடியாத நிலைமையில்இருந்துகொண்டு நம்மவர் மதப்போர் நிகழ்த்துவதையும், அதற்காகப் பெருந்தொகையான பொருளைச் செலவுசெய்துவருவதையுமே நாம் காண்கின்றோம்.

எனவே, இந்து மதத்திற்காகவும்அதன் கடவுளருக்காகவும் பரிந்து பேசும்அன்பர்களை ஒன்று கவனிக்க வேண்டுகிறேன்.

இந்துமதமும் அதிற்பேசப்படும் கடவுளருமே முதன்மையும் சிறப்பும் உடையவர்கள் என்றால், இந்நாவலந் தீவிலுள்ள 40—கோடி மக்களில் 9—கோடி முசல்மான்களும், அவர்கள் கடவுளான அல்லாவும்,ஒருகோடி இரண்டுலட்சத்து எண்ணாயிரம் புத்தர்களும், அவர்கள் கடவுளான புத்தரும்; ஒரு கோடி கிறித்தவர்களும் அவர்கள் கடவுளான இயேசுவும்; பனிரெண்டு லட்சத்து அறுபதினாயிரம் சமணர்களும், அவர்கள் கடவுளான அருகனும், இன்னும் நூறாயிரக்கணக்கான சீக்கியரும், யூதரும், பாரசீகரும் அவர்தம் கடவுளரும், கடவுளே இல்லை என்று முடிவுகட்டியவர்களும், கடவுளைப் பற்றிக் கவலைகொள்ளாதவர்களும்,தனித்தனி கொள்கைகள், பழக்க வழக்கங்கள், உண்பது உடுப்பதில் வேறுபாடுகள்ஆகிய ஒன்றுக்கொன்று சேர்க்கமுடியாத பிரிவுகளோடு இருக்கமுடியுமா? இப்படிச் செய்வதுதான் கடவுள் இயல்பென்றால்; அத்தகைய கடவுள் மக்களுக்குத் தேவை இல்லை, என்ற முடிவுக்குத்தானே வர வேண்டியிருக்கிறது.

இதனாலேதான், நெடுங்காலமாக மதத்தையும் கடவுளையும் ஆராய்ச்சியின்றிப் பின்பற்றித் தங்கள் வாழ்க்கை முறைகளைத் தப்பான வழியில் அமைத்துக்கொண்டுள்ள நம் திராவிட மக்களுக்கு, இவற்றின் உண்மைகளைஎடுத்துக்கூறவும் திராவிடமக்களின் உண்மையான விடுதலையைக் காணவுமே திராவிடர் கழகம் பாடுபடுகின்றது. இதனையறிய மாட்டார் சிலர், அரசியலில் மதத்தைப் புகுத்துகிறார்கள்—கடவுளைக் கண்டிக்கிறார்கள் என்று காட்டுக் கூச்சலிடுகின்றனர்.

கடவுளும் மதமும்மக்களுக்குச்செய்த-செய்கின்றகாரியங்கள் இவை இவையென எடுத்துக்காட்டவோ, எடுத்துக்காட்டக் கூடியயாதாயினும் அவர்களுக்குத்தோன்றுமானால், அவற்றை அவர்கள்கூறும் மதக்கோட்பாட்டின்படி, ஆதாரத்தோடு நிலைநாட்டவோமுடியாதபடி, கடவுளும் மதமும் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை மேலே எடுத்துக்காட்டியுள்ளேன். ஈண்டுக்கூறியவற்றால் தெளிவடையமாட்டாதார்க்கு, அவர்கள் விரும்பும் முறையில் தெளிவுதரவும் காத்திருக்கிறேன். ஆனால், அறிவுக்குப் புறம்பான முறையில் அசட்டுவாதம்புரிய முற்படுவோருக்கு உண்மையை விளக்கி உணரவைப்பது என்பது எளிதில் முடியக்கூடிய காரியமன்று. இத்தகையினருக்குக் காலமென்னும் கதிரவனின் கருத்தொளி நிச்சயம் விளக்கவுரைகூறும். அப்போது, அரசியலில் மதத்தையும் கடவுளையும் ஏன் புகுத்தினார்கள்? கடவுள்தன்மைக்கு ஏன் விளக்கவுரை கூறினார்கள்? மதத்தை ஏன் கண்டித்தார்கள் என்ற உண்மைகள் விளங்கும். அதன்பின்னராவது அவர்கள் திருந்துவார்கள் என்ற நம்பிக்கையே நம்மை இதுபற்றி எழுதும்படி தூண்டிற்று.

# திக்கெட்டும் திராவிட முரசு.

## திராவிடர் கழகம்.

### ஆரணி

17—9—44ல் தோழர். P. கன்னையா தலைமையில் ஷை கழகம் கூடி A. K. ராதாகிருஷ்ணன் தலைவராகவும் K.ஐப்பு லிங்கம் துணைத்தலைவராகவும் மற்றும் செயலாளர்கள் நிர்வாக அங்கத்தினர்கள் யாவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தோழர் ரத்தினசபாபதி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

★

### கொழும்புக்கிளை

மேற்படி கழகத்தின் மாதாந்திரப் பொதுக்கூட்டம் சென்ற 3—9—44ல் கொள்ளுப்பிட்டி, காலி ரோட், 159-ம் நிர் இல்லத்தில் தோழர் எஸ்.எஸ் நல்லையா பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் எஸ். பழனிநாதன், ஜே. அருமைநாயகம் முதலியவர்கள் பேசினார்கள்.

★

### சலகண்டபுரம்

16—9—44 இவ்வூர் தெ. இ. ந. உ. பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. அப்பொழுது,

சேலத்தில் 27—8—44-ல் நடைபெற்ற 16-வது தெ. இ. ந. உ. சங்க மாகாண மாநாட்டின் முடிவுகளையெல்லாம் இச்சங்கம் பூரணமாக ஆதரிக்கிறது என்றும்,

2. ஷை மாநாட்டின் முடிவுகளுக்கேற்ப இன்று முதல் இச்சங்கத்தை திராவிடர் கழகம் (Dravidian Fedaration) என மாற்றியமைக்கிறதென்றும், ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்ப்பதென்றும், தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★

### திருவையாறு

17—9—44 திருவையாறு திராவிட கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்த தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அதுபோது அரசர் கல்லூரி மாணவர் தோழர் ஆ. மகிழ்நன் தலைமையில் மாணவர்கள் பெரியாரின் பெருந்தொண்டு குறித்துச் சொற்பொழி வாற்றினார்கள். சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிக்கிறது என்று தீர்மானம் நிறைவேறியது.

### கோபி

இம்மாதம் 10உ

சேதுராம் இல்லத்தில் G. P. சேதுராம் தலைமையில் தெ. இ. ந. உ. சங்கக்கூட்டம் நடைபெற்றது. ஷை சங்கம் கலைக்கப்பட்டு "திராவிடர் கழகம்" நிறுவப்பட்டது. தலைவர் G. A. அங்கப்பன், G. P. ரங்கசாமி, கருவூலர் (காவியர்) சதாசிவம், G. A. ராஜு ஆகிய ஐந்து பேர் நிர்வாக அங்கத்தினர்கள். பெரியார்விழா கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. சேலம்மாநாட்டைக் குறைகூறுபவர்கள்மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★

### மாயவரம்

66-வது பெரியார் பிறந்த தினவிழா 15—9—44 தோழர் வ. குஞ்சிதபாதம் B. A. B. L. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

★

### திருக்கழுக்குன்றம்

3—9—44ல் திருக்கழுக்குன்றம் தெ. இ. ந. உ. கழகத்தைத் திராவிடர் கழகமாக சேலம் மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க மாற்றி, முறையே தலைவரையும், காரியதரிசியையும், பொருளாளரையும், தேர்ந்தெடுக்கப்பட்டது.

★

### திண்டிவனம்

20—9—44 இக்கர் மூன்று இராந்தல் சௌக்கில், புரட்சிக்கவிபாரதிதாசன் அவர்களின் தலைமையில் திராவிடர் கழகக்கூட்டம் நடைபெற்றது. அண்மையில் நடந்த சேலம் மாநாட்டின் தீர்மானங்களையும்பெரியார் ஈ. வெ. ரா. தலைவர் என்பதையும் இக்கழகம் ஆதரிக்கிறது.

★

### நாகை

23—9—44 யன்று மாலை 6-30-க்கு கழககட்டிடத்தில் கழகத்தலைவர் R. V. கோபால் தலைமையில் நிர்வாகக் கமிட்டி கூட்டம் கூடியது. அதுசமயம் நமது திராவிடர் கழகத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து சட்ட திட்டத்தையும் மெம்பர்கள் சேர்க்கும் புத்தகத்தையம் உடனே அனுப்புமாறு நமது தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. வுக்கு தபால் எழுதக்காரியதரிசிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

### சேலம்

30—10—44 ஷை கழகத்திற்கமிட்டிக் கூட்டம் சேலம் புகைப்பட விடுதியில் நடைபெறும். (Photo. Stores) அனைவரும் வருக.

★

### பொன்மலை

திராவிட வாலிபர்கழக ஆண்டுவிழா.

ஷை ஆண்டுவிழா 25உ மாலை, பொன்மலையில் தோழர் நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. தொழிலாளரும் யுத்தமும் என்பதுபற்றித் தோழர் K.V. அழகர்சாமி சொற்பொழிவாற்றினார். தோழர்கள் ஜனார்த்தனம், S. V. லிங்கம், C. N. அண்ணாதுரை ஆகியோர் பேசினர். தோழர் பராங்குசம் நன்றி கூறலுடன் ஆண்டு விழா இனிது முடிந்தது.

★

## திருமணம்.

கும்பகோணம் தோழர். மாரிமுத்துக்கும் திருப்புவனம் தோழியர் காளியம்மாளுக்கும் மணமகன் இல்லில் 15—9—44 தோழர் K. K. நீலமேகம் முன்னிலையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்பட்டது. திராவிடநாடு வளர்ச்சிக்கு 1 ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

★

### பெரியார் பிறந்தநாள் விழா

அருப்புக்கோட்டையில் கொண்டாட்டம்

இன்றுகாலை 11-மணிக்கு தியாகராய வாலிபர் சங்க முன்பாக தோழர் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியனார்அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வே, ரா. அவர்களது 66-வது பிறந்தநாள் விழா தொடங்கப்பட்டது. ஆசிரியர் T. K. சுப்பிரமணியம் தோழர்கள் S, S.பழனிச்சாமி சோ, கந்தசாமி ஆகியோர்கள் முறையே தமிழ்க்கொடி உயர்த்தியும் கொடியின் வரலாறு, பெரியார் பெருஞ்செயல் என்பனபற்றியும் சொற்பொழிவாற்றினர்

———

### திருமணம்.

13—9—44-ல் திருப்பத்தூர்த் திராவிடர் கழகத்தலைவர் தோழர் சின்னத்துரை தலைமையில் செந்தமிழ்ப் பொது நிலைப்பள்ளியில் தோழர்கள் கண்ணகி-பெரியகருப்பன் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அது குறித்து நமது பத்திரிகைக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

# தீச்சுழலில்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்கள், யுகயுகமாகப் படுக்கை விட்டெழாத பகவானின் திருவிளையாடல் அல்ல. வெப்பத்துடன் விளைத்த பெரும் போரிலும், தீயை உண்டாகச் செய்த பெருமுயற்சியிலும். சிறிது வெற்றி கண்ட மனிதன், தீச்சுழலை வணங்கும் பருவத்திலிருந்து அதைக்கருவியாக்கும் பருவத்திற்குத் தாவினன். போர் முறை மாற மாறத், தீச்சுழலின் வேகமும் மாறிக்கொண்டே சென்றது. வெல்லப்பட்ட கார்த்தேஜ், அழிக்கப்பட்ட ட்ராய், எரியுண்ட மதுரை இவைகள் தீச்சுழலில் சிக்கி அழிந்தொழிந்த பெருநகரங்களாகும். தீயை வணங்கிய நாடுகள் பல இருந்தனவெனினும், தீச்சுழலை மூட்டி அதற்கு யாகமெனப் பெயர் சூட்டிப் பரலோகத்தையும்படுநரகத்தையும் காட்டித், தங்கள் உரிமையைப் பலமாக நாட்டி, விதியென்ற குற்றத்தைச் சாட்டி, மக்களை ஏழ்மை யெனும் கயிற்றில் மாட்டி, மதமெனும் வண்டியில் பூட்டிக், கொடுமையெனும் கூர்முள்ளைத் தீட்டி, அறியாமையெனும் இருளில் ஆட்டிவைத்த பூசாரக் கூட்டம் நம நாட்டில் ஒன்றில் மட்டுந்தான் இன்னும் நிலைத்திருக்கிறது. யாக குண்டங்களில் உணவுப் பொருள்களையும் நெய்யையும், சோமரசத்தையும் சிந்துவதுடன் நில்லாது, ஆடுமாடு குதிரை இவைகளைத் துண்டு, துண்டுகளாக்கித் தீயிலிட்டு வாட்டி உண்டனர். அத்துடன் நில்லாது, மனிதர்களையும் தீயிலிட்டு யாகஞ் செய்தனர். அறுபதாண்டுக் கிழவனுக்கும், பதினாருண்டுப் பதுமைக்கும் நடக்கும் பொருந்தா மணத்திற்குக் கூடத் தீச்சுழல் சாட்சியாக அழைக்கப்பட்டது. ஆரும்நாளே மணப்பறை கொட்டிய இடத்தில் பிணிப்பறைகொட்டும், கணவனிறந்ததும் உலகம் அவளை உதறித் தள்ளும், வைதிகம் தலைவிரித்தாடும். பிராமணியம் அவள் பிழையைப் பொறுக்காது. குருக்கள் அவள் எதிரே நின்று கொக்கரிப்பார். திருமணத்தின்பொழுது சாட்சி சொல்ல வந்த முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், காந்தர்வர், வித்தியாதரர் எவரும் முன்வரமாட்டார்கள். பதிவிரதையின் இன்னலுக்கிரங்கி, விடையேறி விமலனோ, கருடன் ஏறி கரியமாலோ, அன்னமேறி அயனோ, காட்சி அளிக்கமாட்டார்கள். கடாமீதேறியகாலன்தான் காட்சியளிப்பான். மணவாழ்க்கையைப் புதுக்கித் தந்த தீச்சுழல், அவளின் இவ்வுலக வாழ்விற்கே முற்றுப்புள்ளிவைத்துவிடும், உடன்கட்டையேறும் இக்கொடிய பழக்கம் அரசியலாரால் சட்டமூலமாக ஒழிக்கப்பட்டபொழுது சனாதனங்கள் சதிராடின. அரசியலாருங்கு ஊக்கங் கொடுத்த இராஜாராம் மோகனராய், தன்னுடன் பிறந்தானின் மனைவி தீச்சுழலில் பட்ட அவதியைப்பற்றி எழுதியுள்ள குறிப்ப ஈண்டு குறிப்பிடத்தக்கது.

‘என் உடன்பிறந்தான் இறந்ததும் இளம் வயதினளான எழில்மிகு அவர்வாழ்க்கைத் துணைவிஇந்து சமயச்சழக்கர் கூறுவது போல உடன்கட்டை யேற முதவில் ஒப்பவில்லை. மூர்க்ககுணமிகுந்த புரோகிதர்களின் வற்புறுத்தலால், அவள் சுடலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். எரிகின்ற தீச்சுழலைக் கண்டதும், அவ்வேழைப்பெண் அஞ்சி அழத்தொடங்கினாள். புரோகிதக் கூட்டத்தின் வற்புறுத்தலுக்கு அஞ்சித் தீயில் குதித்தாள். அவள் தீயிடைப் புழுவெனத் துடித்த காட்சி விவரிக்க வொண்ணாதது. பொறுக்கமுடியாத வெப்பத்தால் இறுக்கப்பட்ட அம்மங்கை தீயிடைப் புரண்டு, புரண்டு கதறியபொழுது, புரோகிதர்களின் ஏவலரால் காலனின் காலாட்கள் போன்ற கோரவுருவத்தினர் சிலர், கூர்மையான மூங்கில் தடிகளால் குற்றுயிருடன் தீயிடைப் போராடும் அவ்விளம் மங்கையைப் பலதரம் குத்திக்குத்தித்தீச் சுழலில் தள்ளி வதைத்து எரித்தனர்” இது பெரியாரின் அம்புறாத்துணியிலிருந்து எடுக்கப்பட்டதல்ல. பிரம்மசமாஜம் கண்ட பெரியோனின் குறிப்புக்கள். பழமையில் புரளும் பண்டிதர்கள், இந்து மதத்தை ஏற்றிப் பேசும் நாவலர்கள் இதற்கு என்ன ஒப்புதல் கூறுகின்றனர். இன்னும் ஆயிரமாயிரம் புராண இதிகாசங்களைத் தீயிலிட்டாலும் ஏகுமே. நால்வருணம் தொழில் முறையில் ஏற்பட்டது, முன்னோர்கள் முட்டாள்களல்ல என முறையிடும் மூதறிஞர்கள், இளம் பெண்ணைத் தீயில் தள்ளும் இக்கொடிய பழக்கத்தை அரசியலாரின் கடடுத்திட்டம் இல்லாவிட்டால் அழித்திருப்பார்களா! துப்பாக்கி முனைக்கும், தோட்டாவின் வேலைக்கும் அஞ்சியொடுங்கியிருக்கும் நால்வருணம் அன்று ஏன் இளம் விதவைகளுக்கு இரங்கவில்லை? இரத்தவெறி கொண்டலையும் நால்வருணத்தின் ஆணிவேரை நாங்கள் ஏற்றும் தீச்சுடர் உறுதியாகப் பொசுக்கியே தீரும், இளம் விதவைகளுக்கு இன்னும் விடுதலை கொடுக்காத கடடிச் சமூகம் தானாக அழிந்து போகுமுன் அழிக்கப்பட்டுவிடும். மத்தியில் நின்று சிந்துபாடி மகிழும் கூட்டத்திற்கும், அடிவருடி அடங்கா மகிழ்ச்சி கொள்ளும் குழுவிற்கும், இன்றைய வாழ்விற்காக இதமாகப்பேசிச் சுயமரியாதைக்காரர்களைத் தூற்றும் சுமடருக்கும், கோவிலின் கொற்றவராய், குருக்களின் பாதுகாவலராய்; எழுச்சியுற்ற இளைஞர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விடையிறுக்கத் தெரியாமல் விழிக்கும் பிரசிங்கியாருக்குப் பக்கபலமாய், ஊரைக்கொள்ளையடித்து உற்சவங்களில் உலவித்திரியும் கனத்த உருவங்களுக்கும் எச்சரிக்கை செய்கிறோம், விலகி நில்லுங்கள் என்று. எங்களின் இலக்கிற்கும், நாங்கள் ஏற்றிய தீச்சுழலுக்கும் இடையே உள்ளவர்கள் ஒதுங்கி நிற்கட்டும், இல்லாவிட்டால்அகப்பட்டுக்கொள்வார்கள் தீச்சுழலில்.!

பிராமணியத்திற்கும் புத்தசமயத்திற்கும் என்றும் இடையறாதபோர். கௌதமனின் கொள்கைகள் காட்டுத்தீபோலப் பரவப்பரவ, பாலைக் குடக்குடமாகக் குடித்துவிட்டுப் பரலோகத் தபாலை பராமரிக்கும் கூட்டத்தின் செல்வாக்குக் குறைந்தது, யாக குண்டங்கள் மூடப்பட்டுப் பலிபீடங்கள் அகற்றப்பட்டுப்புத்த கோட்டங்கள் நாடெங்கும் எழுப்பப்பட்டன. கடவுளைப்பற்றிக் கவலைப்படாதே, என்ற சித்தார்த்தனின் சித்தாந்தத்திற்கு முன்உயிர்க்கொலைபுரிந்து சோமரசத்தை உண்டு, ஊரை ஏமாற்றிவந்த சுயநலச் சோம்பேரிகளின் வாழ்வு சிதைந்தது. புத்தகலைக்கு நாடெங்கும் சிறப்புத்தரப்பட்டது. அவ்வாறு புத்தகலைகளுக்குப் புகலிடமாய் விளங்கிய இடம் நலந்தா. அங்கு நிலவிய பல்கலைக் கழகம் மிகச்சிறந்ததாகக் காணப்படுகிறது. இன்னும் வெல்லப்படாததும், நெருங்கப்படாததுமான இடத்தை அறிவுலகில் அடைந்துள்ள கிரேக்க நாகரிகத்தின் இரு கண்களாக ஏதன்சும், அலக்சாந்திரியாவும் எவ்வாறு திகழ்ந்தனவோ, எழுச்சியுள்ள இத்தாலியில் பைசாவும், பதுவாநகரமும் எப்படி விளங்கினவோ, அவ்வாறே புத்தகலையில் பூத்த தனிப்பூவாக நலந்தா விளங்கியது. ஆசிரியரும், மாணவரும் ஒருங்கிருந்து பயிலும் முறை நலந்தாவில் நன்குசெழித்துப்பண்பட்டது. அங்கு பதினாயிரத்திற்கு மிக்க மாணவர்கள் பயின்றனர். நாலடுக்கு மாடங்கள் நலமாக நிலவிய இடம். அரசன் அருள்மிகவுண்டு. இறையிலியாக அளிக்கப்பட்ட சிற்றூர்களின் வருவாயிலிருந்து அப்பல்கலைக்கழகம் நடத்தப்பட்டு வந்தது. மாணவர்கள் தங்கியவிடுதிகளின் சிதைவிலிருந்து அதன் ஒப்பற்ற தன்மை ஒருவாறு ஊகிக்கப்படுகிறது. இலவசமாக உண்டி, உறையுள், உடுக்கை முதலியன கொடுக்கப்பட்டது. அதினின்றும் வீசிய அறிவொளியால்ஈர்க்கப்பட்டு, இமயத்தின் நச்சுக் காற்றுக், கடுங்குளிர் இவற்றைப் பொறுத்துக்கொண்டு காடுமுரடான கற்களில்பட்டு, இரத்தம் கசியும் கால்களுடன், கள்ளருக்குத்தப்பி, வெள்ளத்திற்குமிஞ்சி, கூப்பிய கைகளுடன், புவியைத்துறந்த புத்தனின் புகழ் பாடி, அவ்வறிவுக்கூடத்தில் வந்துவிழுந்த சீனமக்களே பல்கலைக்கழகத்தில் பெரும் பகுதியினராகக் காணப்பட்டனர். ஈழநாட்டு உழவனும், சீனநாட்டுச் சீமானும் ஒன்றாக அமர்ந்து கல்விபயின்றனர். நல்லொழுக்கம் துலங்கிய நலந்தா-அது அறிவின் உறைவிடம், அமைதியின் இருப்பிடம். புலமையின் புகலிடம், ஆனால் பார்ப்பனியத்தின் வெறுப்பிடம். திடீரென்று ஓர் நள்ளிரவில் அறவோர் பள்ளியில் அனல்மூண்டது. புத்த கோட்டங்களில் புகை கிளம்பியது, சுவடிக்சாலையில் சுடர் தோன்றியது, மாணவர்விடுதியில்பெரும் வெளிச்சம் தெரிந்தது.

(தொடரும்.)

## கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலை ஆண்டு விழா.

நாஞ்சிநாடு, கோட்டாறு, சுயமரியாதை வாசிப்புச்சாலையின், 15வது ஆண்டு நிறைவு விழா, 15—9—44ல், திரவிய விலாசம் என்ற பெயரால் அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தலில், திருநெல்வேலி திராவிடத்தளபதி தோழர் A. V. முத்தையா அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. மேற்படி வாசிப்புச் சாலைச்செயலாளர் தோழர் S. பூதலிங்கம் அவர்கள், விழாவிற்கலந்துகொள்ள வந்திருந்தோரை வரவேற்றும், சங்கத்திற்குப் பேருபகாரம் புரிந்து ஊக்குவித்து வரும் தோழர் பூ. திரவியம் அவர்களைப் பாராட்டியும் பேசினார். தலைமைபூண்ட தோழர் A. V. முத்தையா அவர்கள் நாஞ்சிநாட்டுத் தமிழரின் நற்பண்புகளைப் புகழ்ந்துரைத்தும், தன்மானக்கொள்கைகளை விளக்கியும் பேசினார். தோழர் C. N. அண்ணாத்துரை, பெரியார் படத்தைத் திறந்துவைத்து, அவர் ஆற்றியதைப் பற்ற தொண்டுகளை விவரித்தார். அதையொட்டித் தோழர் அ. பொன்னம்பலனார், பெரியார் பாராட்டு உரை என்ற தலைப்பிலே பெரியாரின் பெருந்தொண்டினைப் பாராட்டியும், சீர்திருத்தக் கருத்துகளை விளக்கியும் விரிவுரையாற்றினார். தோழர் பூ. திரவியம் அவர்கள் மாளிகையில் விருந்துபசாரம் நடைபெற்ற பிறகு, மாலை 5-மணிக்கு, விழாமீண்டும் துவக்கப்பட்டது. தமிழர் நாகரிகம் என்பது பற்றித் தோழர் குமாரவேல் பேசினார். சமுதாய வளர்ச்சியும் சமய உணர்ச்சியும் எனும் பொருள்பற்றித் தோழர் அ. பொன்னம்பலனாரும், கலையும் வாழ்வும் என்பதுபற்றித் தோழர் அண்ணாத்துரையும் பேசினர். நாஞ்சிநாட்டுத் திராவிடர் கழகத்தாரால் தோழர் அண்ணாத்துரைக்கு ஒரு வரவேற்புரையைத் தோழர் இராமையா வாசித்தளித்தார். திராவிடநாடு பத்திரிகைக்காகத் தோழர் பூதலிங்கம் அவர்கள், கோட்டாறு சு. ம, சங்கத்தின் சார்பில் 500 ரூபாய் நன்கொடைஅளித்தார். தோழர் அண்ணாத்துரை மேற்படி வாசிப்புச்சாலைக்கு ரூ. 100. நன்கொடையாகத்தந்து, ஆதரவளித்த தோழர்களுக்கும், ஆர்வமிக்க நாஞ்சிநாட்டுத் தமிழர்கட்கும் நன்றியறிதலைக் கூறினார். தலைவர் முடிவுரைவணக்கங்கூறலுடன் விழா இரவு 9-30மணிக்கு இனிது முடிந்தது.

## பிறப்பு

19-9-44 காலையில் திருவாரூர் பிரபல திராவிட இயக்கத்தோழர் ப.அரங்கராஜன் அவர்களுக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் சேயும் சுகம்.

## திருமணங்கள்.

1944ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ந்தேதி புதன்கிழமை வாணியம்பாடி மாஜிமாவட்டத் தலைவர் அம்பலூர் டி. கரியகவுண்டர் தலைமையில் மாஜி திராவிடன் விடுதலை குடிஅரசு ஏஜண்டுமான திரு. ஏ. ராகவன் குமாரத்திக்கு தமிழ் முறையில் திருமணம் நடைபெற்றது.

"குடி அரசு" "திராவிடநாடு" பத்திரிக்கைகளுக்கு முறையே ஒரு ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது.

ஃ ஃ ஃ

நாமக்கல் தோழர் வெங்கடாசலத்திற்கும் தோழியர் முத்துக்கண்ணம்மாளுக்கும் தாசில்தார் தோழர் V. சிதம்பரம் பிள்ளை தலைமையில் 4—9—44 தமிழ்த் திருமணம் நடந்ததை முன்னிட்டுத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 1. நன்கொடை தரப்பட்டது.


ஃ ஃ ஃ

சென்னை வண்ணாரப்பேட்டை செல்வம் விளையாட்டுக்கழக உறுப்பினர் தோழர் கோமளசேகரனுக்கும் தோழியர் எமிலிதாயம்மாளுக்கும் காதல் திருமணம் நடைபெற்றது.

ஃ ஃ ஃ

திருவையாற்றில், தோழர் N. சிவவடிவேலுக்கும் தோழியர் ஜானகிக்கும் தோழர் கோவிந்சாமி மூப்பனார் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் 13-9-44 நடைபெற்றதை முன்னிட்டுத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 5. நன்கொடை தரப்பட்டது.


தந்தி:—"புறமார்க்." திருச்சி.





செம்பரைத் தோழர் S. சீனுவாசனுக்கும் தோழியர் பவுன்பாப்பம்மைக்கும் தோழர் K. A. P. விசுவநாதன் தலைமையில் 10—9—44-ல் திருமணம் நடைபெற்றதை முன்னிட்டுத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா. 5. நன்கொடைதரப்பட்டது.

ஃ ஃ ஃ

13—9—44 காலை திருவாரூர்த் தோழர் T. K. விசயராகவலு B. A, B. L; அவர்கள் தலைமையில் முரசொலி ஆசிரியர் தோழர். மு. கருணாநிதிக்கும் சிதம்பரம் C. S. ஜெயராம் தங்கை பத்மாவதிக்கும் வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெற்றது.

ஃ ஃ ஃ

சென்னை கா. மு. இராஜரத்தினம் அவர்கள் திருமகனாராய பாலசுந்தரத்திற்கும், திரு. T. கோவிந்தராஜ் முதலியார் திருமகள் இலட்சுமி அம்மைக்கும் 13—9—44 அன்று சூளை, பகுத்தறிவு நிலையத்தில் திரு. M. அரங்கநாத முதலியார் அவர்கள் தலைமையில் தமிழ் முறையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 2. வழங்கப்பட்டது.

## பெரியார் பிறந்தநாள்.

திருப்பத்தூர் (R. D.) செப் 17.

இன்று மாலை 5-மணிக்கு இந்நகர் திராவிடர்கழக சார்பாகத், தென்மாப்பட்டு செந்தமிழ்ப்பொதுநிலைப்பள்ளியில் தோழர். முத்துச்சாமி வல்லத்தரசு அவர்கள் தலைமையில் "பெரியார் பிறந்ததின விழா" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## ஆசிரியர் ராஜீனாமா

வாளாடி திராவிடர் கழக நிதிகாப்பாளரும் (பொக்கஷதார்) இவ்வூர் ஜில்லா போர்டு ஆண்பாடசாலை ஆசிரியருமான தோழர் G. சோமசுந்தரம், திராவிடநாட்டுப்பிரிவினைககாகத் தொண்டு செய்வதாகத் தீர்மானித்து 14—9—44ல் தலைமையாசிரியரிடம் தமது ராஜீனாமாக்கடிதத்தைச்சமர்ப்பித்தார். அவர் தமது ராஜினாமாக் கடிதத்தில் திராவிடநாட்டுப் பிரிவினைக்குத் தொண்டு செய்வதற்காக ராஜீனாமா செய்கிறேன் என்று குறிப்பிட்டிருப்பது போற்றத்தக்கது.

## பகுத்தறிவாளர் கழகம்

அவலூர்பேட்டை

17—9—44ல் கூடிய பகுத்தறிவாளர் கழகத்தின் வாராந்திரக் கூட்டத்தில் "பெரியார்" பிறந்தநாள் விழா ஆசிரியர் ரங்கசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது.


Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.